# SILAPPATHIKARAM

*Dr. R. P. Sethu Pillai Silver Jubilee Commemoration Endowment Lectures 1963–64*

BY

Prof. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D.

UNIVERSITY OF MADRAS

1964

T14014

R005C03

T. 14014

# SILAPPATHIKARAM

*Dr. R. P. Sethu Pillai Silver Jubilee Commemoration Endowment Lectures 1963–64*

BY

Prof. A. CHIDAMBARANATHA CHETTIAR, M.A., Ph.D.

UNIVERSITY OF MADRAS

1964

**Price Rs. 1·25**

© UNIVERSITY OF MADRAS
1964

Printed at the Rathnam Press, Madras-1.

# I. சிலப்பதிகாரம்

(17—2—1964)

---

சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுடைய நினைவுநிதிச் சொற்பொழிவுகளை இவ்யாண்டு நான் இயற்ற வேண்டுமென்று முடிவுசெய்து என்னை அழைத்தமைக்காகப் பல்கலைக்கழக ஆட்சியாளர்களுக்கும், சிறப்பாகப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களுக்கும் என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளுகிறேன். டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களுடைய மணிவிழாக் கண்ட பெரியோர்கள் அவர் பெயரினால் ஒரு நிதியம் அமைத்துப் பல்கலைக்கழகத்திற்கு அளித்து அதனைக்கொண்டு தமிழிலக்கியம்பற்றிச் சொற்பொழிவாற்றுதற்கு ஆண்டுதோறும் வகைசெய்தல் வேண்டுமென வேண்டிக் கொண்டதற்கேற்ப, பல்கலைக்கழகம் இச்சொற்பொழிவுகளுக்கு இவ்யாண்டு ஏற்பாடு செய்துள்ளது. மறைந்த பேரறிஞர் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களுக்குச் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய தமிழ்ப் பனுவல்களிடத்து மிக்க ஆர்வம் உண்டென்பதை யாவரும் அறிவர். கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் தமிழகத்தின் பெருமையைத் துலங்க வைத்த கவிஞர்களாகத் திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் ஆகியோரைப்பற்றிப் பாராட்டி உரைத்துள்ளார். பாரதியாருடைய இவ்வாக்கில் மிக்க நம்பிக்கை கொண்டவர் டாக்டர் சேதுப்பிள்ளை. அதனால், பல்லாண்டுகளாக இக்கவிஞர்கள் மூவரைப்பற்றி அவர் அடிக்கடி மேடைகளில் முழங்கியும் கட்டுரைகள் எழுதியும் ஆய்வுரைகள் இயற்றியும் வந்துள்ளார் என்பது பலர் அறிந்த செய்தி. சிலப்பதிகாரக் கதை, சிலப்பதிகார நூனயம் என்ற தலைப்புக்களில் அவரால் எழுதப்பட்ட புத்தகங்கள் நாட்டில் மக்கள் பலரால் படித்துப் போற்றப்படுவன என்பதும் பலர் அறிந்த செய்தி. அவருடைய நினைவுகாரணமாக இயற்றப்படும் இச்சொற்பொழிவுகளின் தொடக்க நாளில் அவரது சிறந்த இலக்கியத் தொண்டினை நாம் நினைவுகூர்ந்து பாராட்டுவோமாக.

சிலப்பதிகாரத்தை முழு வடிவில் நமக்கு வெளியிட்டுத் தந்த தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களைப்பற்றியும் இன்று நினைவில் இருத்துதல் வேண்டும். பல சுவடிகளை அரிதின் முயன்று தேடிக் கண்ணுற்று அரும் பாடுபட்டுப் பல நூல்களைப் பதிப்பித்த அவர் 1927-இலேயே சிலப்பதிகாரத்தையும் பதிப்பித்துத் தந்தார். அதற்குச் சிறிது பின்னால் சிலப்பதிகார மூலத்தை மாத்திரம் பதிப்பித்த ஒருவர் சிலப்பதிகாரம் சேரமான் பெருமாள்நாயனாரால் இயற்றப்பட்டதெனப் பதிப்பித்துவிட்டார். "ஒருந் தமிழ் ஒரு மூன்றும் உலகின்புற வகுத்துச் சேரன் தெரித்த சிலப் பதிகாரத்திற்கு" அடியார்க்கு நல்லார் உரை வகுத்ததாக உள்ள ஒரு சிறப்புப் பாயிரத்தை வைத்துக்கொண்டு சேரன் என்பதைச் சேரமான் பெருமாள் நாயனார் என அவர் தவறாகக் கருதிவிட்டனர் போலும்!

சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்தை மட்டும் அடியார்க்கு நல்லார் உரையுடன் 1880-இலேயே பதிப்பித்த பெருமை திரு. தி. க. சுப்பிரமணிய செட்டியாருடையது. அப்பதிப்பில் ஒவ்வொரு கதைக்கும் அவர் தந்துள்ள தலைப்பு விளக்கம் அருமையாக அமைந்துள்ளது. அவர் முன்னுரையாகத் தந்துள்ள அறிவிக்கையிலிருந்து எடுகுறிப்பு ஒன்று இவ்வாறு உளது:—"பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதி காரம் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று பிரிவு உள்ளது. இந்நூல் செய்தவர் சேரர் குலத்துதித்த இளங்கோவடிகள். பஞ்சகாவியங்களாவன சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. அடிகள் எனப்பெயர் வழங்குதலால் இவரைச் சமணர் என்று சிலர் சொல்லுகின்றனர். சமணராயின் மணி மேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயத்திற்குச் சாத் திரங்களாகவும் சிந்தாமணி அருக சமயத்திற்குச் சாத்திர மாகவும் வழங்குதல்போலத் தவவேடந் தாங்கின இவர் இயற் றிய இந்நூலும் அச்சமயத்திற்குச் சாத்திரமாதல் வேண்டும். அவ்வாறில்லாமையால் இவரைச் சமணர் என்று சொல்லுதல் பொருந்தாது. ஆயின், அருக சமயத்தைப் பெரும்பாலுஞ் சொல்லியிருக்கின்றனரெனின், சைவ வைணவ சமயங்களைச் சிறப்பித்துக் கூறியதுபோல அதனையுஞ் சிறப்பித்துக் கூறினரெனவும், அவர்காலத்தில் சைவவைணவ சமயங் களைப்போல் அருகசமயமும் பௌத்த சமயமும் வழங்கின

என அக்கால வழக்கைப் பலவிடங்களினுங் கூறியதுபோல இவற்றையுங் கூறினர் எனவும், அடிகளெனப் பெயர் வந்தது உயர்வுபற்றி எனவுங் கொள்ளுதல் வேண்டும்.'

இந்தக் காப்பியம் இளங்கோவடிகளால் அருளப்பட்டது என்பதும், இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் இளவல் என்பதும், அவர் அரசுதுறந்து குணவாயிற் கோட்டத்தில் இருந்தார் என்பதும் சிலப்பதிகாரப் பதிகத்தால் அறியப்படுகின்றன. இளங்கோவடிகள் முப்பது காதைகளாக இயற்றிய உரையிடையிட்ட இப்பாட்டுடைச் செய்யுளை மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் கேட்டார் என்பதும் இப்பதிகத்தால் அறியப்படுகிறது.

சிலப்பதிகாரம் எழுந்த காலம் கி. பி. 171-4-ஐ ஒட்டிய காலம் என இப்பல்கலைக்கழகத்தில் இந்திய வரலாற்றுப் பேராசிரியராகத் திகழ்ந்த திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சதர் முடிவு கட்டியுள்ளார். அவர் கருத்துப்படி சங்க காலம் என்பது கி. மு. ஐந்தாவது நூற்றாண்டுமுதல் கி. பி. நான்காவது நூற்றாண்டுவரை அமைந்த காலம். சிலப்பதிகாரத்திற் காஞ்சிப்பல்லவர்களைக் குறித்து யாதொரு குறிப்பும் காணப்படாமையால் அது கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும், இலங்கைக் கயவாகு வேந்தன் (முதலாமவன்) ஆட்சிக்கு வந்த காலம் கி. பி. 171 ஆதலால் கண்ணகிக்குக் கடவுள் மங்கலம் செய்த பொழுது அவன் வந்திருந்த ஆண்டு 174-ஆக இருத்தல் கூடும் என்றும் உள்ள முடிவுகளை 1939-இல் அவர் வெளியிட்டார். இக்கருத்தோடு ஒத்த கருத்தினைக் கொடைக்கானல் வானிலையாராய்ச்சி வல்லுநர் திரு. பி. ஆர். சிதம்பர ஐயரும் ஏற்றுக்கொண்டுள்ளார். சிலப்பதிகாரத்திற்கு காணப்படும் "ஆடித்திங்கட் பேரிருட் பாக்கத்து" என வரும் வானிலை பற்றிய குறிப்புக்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்துள்ள

1. "The date of the composition of the Silappadikaram is settled once for all. It was in the 2nd half of the second century after christ." சிலப்பதிகாரத்தைப்பற்றி அவ்வறிஞர் மேலும் எழுதியிருப்பதாவது :—"It takes a legitimate place among the extant Sangam works and is very valuable to the historian of South India *** A futile attempt has been made to prove that these two epics (Silappadikaram and Manimekalai) were post-Sangam works."

கணியர் தமிழ்ப்பெரும்புலவர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை மதுரை தீயுண்ட ஆண்டு கி. பி. 144 என்பதை நன்கு ஆராய்ந்து முடிவு கட்டியுள்ளார்[2].

"சிலப்பதிகாரக் காப்பியம்" என்று நூல் எழுந்த காலத்திற் பெயர் கூறப்படவில்லை. அது முத்தமிழ் விரவியதாதலால் இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்று கூறத்தக்கது என அடியார்க்கு நல்லாராகிய உரையாசிரியர் எழுதியுள்ளார். "சிலப்பதிகாரம் என்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என இளங்கோவடிகள் கூறி இதனை இயற்றினர் என்பது பதிகத்தாய் அறியப்படுஞ் செய்தி. இது தொல்காப்பியர் இலக்கணத்தின்படி தொன்மை என்னும் வனப்பு அமைந்த நூல்.

"தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்பது தொல்காப்பியம். "பெருந்தேவனர் பாரதமும், தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் இதன்பாற்படும்" என்பது பேராசிரியர் உரை. இதனைத் 'தோல்' என்னும் வனப்புடையதாகவுங் கூறலாம்.

"இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந்து ஒழுகினும்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்"

என வரும் தொல்காப்பியத்தையொட்டி இதனைத் 'தொல்' எனவுங் கூறலாம். மணிமேகலை என்னுங் காப்பியந்தான் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் கூறுவது என்றும், சிலப்பதிகாரம் அறம், பொருள், இன்பம் மாத்திரம் கூறுவதாற் பெருங்காப்பியம் எனக் கூறத்தக்கதன்று என்றும் கருதுவோர் கருத்து பொருந்தாது. வீடுபேறு அடைந்தவர்களைப்பற்றியும் வீடுபேற்றிற்கு வழிகளைப் பற்றியும் சிலப்பதிகாரம் இடையிடையே சொல்லியிருப்பதாலும், நூல் முடிவில் "சொல்லும் தேளத்துக்கு உறுதுணை தேடுமின் மல்லன் மாஞாலத்து வாழ்வீர்" என்று இளங்கோவடிகள் கூறியிருப்பதாலும், இது வீடுபேற்றையும் பேசும் பனுவல்தான் எனக் கொள்ளுதல்கூடும் எனக் கருதுகிறேன்.

2. அவர் இயற்றிய "வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்" என்னும் புத்தகத்தில் பக்கம் 21-49 காண்க.

புகார் நகரத்திற் பிறந்து தன் குலத்துக் கண்ணகியை மணந்துகொண்டு சில ஆண்டுகள் அவளோடு இனிது இல்லறம் நடத்திய கோவலன் கணிகைகுல மாதவியால் மயங்கிக் கண்ணகியையும் வீட்டையும் மறந்து அவளோடு தங்கித் தன் பொருள் அழியவுற்ற பிறகு ஒருநாள், கடற்கரையோரத்தில் அவன் பாடிய பாடலுக்கு எதிர்ப் பாடலாகப் புறக்கணிக்குங் குறிப்பொடு மாதவி பாடினாள் என்று கருதி இல்லத்திற்கு மீண்டுவந்தவன் பொருளிழந்தமைக்காக வருந்திய ஞான்று கண்ணகி மனமகிழ்ந்து முகத்தில் நகையுடன் தன் சிலம்புகளை எடுத்துத் தந்தாள் என்ற உருக்கமான செய்தியின் அடிப்படையில் இக்காப்பியம் நடைபெறுவதால் இக்காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தை நாம் ஓதுவது கதைக்காக அன்று; நல்ல இனிய உயரிய இலக்கியம் என்பதற்காக ஆம். எனினும், சிலப்பதிகாரக் கதைப்போக்குக்கூட கோவலன் கதையாக வழங்கும் ஏனைய கதைகளோடு ஒப்பு நோக்கப் பெருமையடைகிறது. புகழேந்தி பெயரினால் நடைபெறும் "பெரிய எழுத்துக் கோவலன்" கதை, தா. து. சங்கரதாஸ் இயற்றிய கோவலன் சரித்திரம், ச. சு. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய கோவலன் நாடகம், வீரபத்திரன் என்பார் இயற்றிய கோவலன் கண்ணகி நாடகம் ஆகிய சில புத்தகங்கள் கோவலன் கண்ணகி கதையைப்பற்றி இடைக்காலத்தில் எழுந்தவையாகும். சங்கரலிங்கதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகத்தில் ஆங்காங்கு மக்களை நல்வழியில் திருப்பக்கூடிய அறவுரைகள் இடைமடுக்கப்பட்டிருக்கின்றன ஆயினும், இதுதானும் சிலப்பதிகாரத்தைத் தழுவியதாக இல்லை. புகழேந்தி பெயரால் அளிக்கப்பட்டுள்ள கோவலன் கதையே இவற்றிற்கெல்லாம் முதனூல்போலக் காணப்படுகிறது. அதனை அடியொற்றிச் சில இடங்களில் திருத்தியும் விரித்தும் மற்றவர்கள் அக்கதையை எழுதியுள்ளார்கள். எவ்வாறாயினும், சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன் கண்ணகி மாதவி ஆகியோருடைய குணவியல்புகளுக்கும் இக்கதைகளில் வரும் கோவலன் கண்ணகி மாத்வி முதலியவர்களுடைய குணவியல்புகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகள் உண்டு. இளங்கோவடிகளால் தீட்டப்பட்ட கோவலன் கண்ணகியோடு சில ஆண்டுகள் ஒருங்கியைந்து இன்பந் துய்த்து வாழ்ந்தவன் என்பதும், மாதவியோடு பல்லாண்டுகள் உடன் உறைந்தான் எனினும்

கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரையை நோக்கி வாணிகஞ் செய்ய முற்பட்டவன் திருந்திய உள்ளத்தினனுய் மாறி என்றும் அசைக்கமுடியாத உழுவலன்பினைக் கண்ணகி பால் உடையவனுகிவிட்டான் என்பதும், இந்நிலையில் அவன் வெட்டுண்டு மாய்வது காரணமாகக் காப்பியத்தைப் படிப் போர் இரங்கிய உள்ளத்தராய் வருந்துவர் என்பதும் தெளிவு. பெற்ருேருக்கும் உற்றவருக்கும் தான் செய்த குற்றங் காரண மாக உளைந்து உளைந்து கோவலன் வருந்தியுரைக்கின்ற இடங்கள் சிலப்பதிகாரத்தில் உயிர்நிலைப் பகுதிகள். கதைக் கோவலனே மாருகக் காணப்படுகிருன். மதுரையில் எண் ணெய் விற்ற வாணிகன் ஒருவனது மறுபிறப்பாகக் கதையிற் கோவலன் காட்டப்படுகிருன். மாதவியினுடைய ஆட்டம் தன் மணப்பந்தலில் இருக்கவேண்டுமென்றும் அவ்வாறில்லை என்ருல் உயிரைப் போக்கிக்கொள்வேன் என்றும் அவன் கூறியதாகக் கதைப்புத்தகங்கள் கூறுகின்றன. இக்கதைக் கோவலன், தன் திருமணத்தில் மாதவி வந்து ஆடும்பொழுது அறையினுட் பூட்டிவைக்கப்பட்டான் என்பதும், அவன் வேண்டியதற்கிணங்கித் தாய் கதவினைத் திறந்துவிட்டாள் என்பதும், மாதவியோடு திருக்கடையூர்ச் சென்று அவளுக்கு ஏழடுக்கு மாளிகை கட்டித் தந்தான் என்பதும், மாதவிக்கு அடிமையாகிவிட்டான் என்பதும் ஆகிய இம்முறையில் கதை யில் வருங் கோவலன் தீட்டப்பட்டுள்ளான். சிலப்பதிகாரக் கோவலனே திருமண நாளிலேயே மாதவி வீட்டிற்கு ஓடி விட்டவன் அல்லன்; கண்ணகியோடு சில ஆண்டுகள் சிற் றின்பந் துய்த்து அவளோடு ஒன்றுபட்டு வாழ்ந்தவன். கதைகளில் வரும் கோவலன் மடிந்து எழுப்புவிக்கப்பட்ட பிற்பாடுகூட "மாதவி என்ருல் மடிமேல் வா, கண்ணகி என்ருல் தூரச் செல்" என்றவாறு பேசினவனுகக் காணப் படுகின்ருன். காப்பியக் கோவலனே மாதவியைப் பொய்த்தி என்று உதறித் தள்ளிவிட்டவன் அவள் முடங்கலை மறுத்துத் திரும்ப அனுப்பிவிடுகிருன் என்றும், அசைக்க முடியாத அளவு கண்ணகியிடத்து மீட்டும் அன்புடையவனுகிவிட்டான் என்றும் அறியப்படுகிருன்.

கதைகளில் வரும் கண்ணகி மதுரை மீனுட்சியின் பிறப்பு. அவள் காற்சிலம்போடு பிறந்தவள். அவளைப் பெட்டியில் வைத்து வைகையாற்றில் தள்ளிவிட்டனர். பாம்புகளால் பாது காக்கப்பட்டுச் சென்ற குழவியின் காற்சிலம்பில் நாகரத்தி

னம் பதிக்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் இக்குழந்தையை எடுத்து வளர்த்தார்கள். ஐந்து வயதில் கோவலன் அவளுக்குத் தாலி கட்டும்பொழுதே அவள் அழுதாள். கையில் மாம்பழத்தைக் கொடுத்து அவன் தாலி கட்டினுன். மாங்கனிதான் திருமணம் என்று நினைத்துக்கொள்ளக்கூடிய பேதமைப் பருவத்தில் அத்திருமணம் நடந்தது. பன்னிரண்டு வயதான பிற்பாடு கழுத்தில் தாலி தொங்குவதைக் கண்ட கண்ணகி ஒருநாள் மாமியாரைக் கண்டு அத்தாலி வந்தவிதம் கேட்டுச் செய்தி அறிந்து கோவலனுக்கு ஓலை அனுப்புகிருள். அவ்வோலையில் தான் சாக்காட்டு நிலையில் இருப்பதாக அறிவிக்கிருள். மாதவி இல்லத்தில் ஓலையைக் கொடுக்கப்பெற்ற கோவலன் வருவதற்கு முயற்சி செய்ய அவனைத் தடைப்படுத்திக்கொண்டிருந்த மாதவியைக் கண்ணகி சபிக்கிருள். இன்னும் பல சாபங்கள் இடுகிருள். ஆக்குந் திறலும் அழிக்குந் திறலும் உடையவளாக அவள் கதைகளிற் படைத்துக் காட்டப்பட்டுள்ளாள். காப்பியத்தில் வரும் கண்ணகியோ பன்னிரண்டு வயதில் திருமணம் செய்விக்கப்பட்டவள்; பெற்றோரால் காற்சிலம்பு கொடுக்கப்பெற்றவள். அவள் மாதவியைச் சபிக்கவில்லை. மாமதுரையை எரியுண்ணும்படி இவள் இட்ட சாபத்தைத்தவிர வேறொரு சாபம் இட்டதாகச் சிலப்பதிகாரம் சொல்லவில்லை. கதைகளில் தோட்டதற்கெல்லாம் அவள் சாபங்கள் இட்டது போலவும், நினைத்த நினைத்தபொழுதெல்லாம் கோவலன் அவளுடைய பெயரை மந்திரமாக உச்சரித்து உதவிகள் கிடைக்கப்பெற்ருன் என்பதுபோலவுஞ் செய்திகள் கூறப்பட்டுள. சிலப்பதிகார வாழ்த்துக்கதையில் காவற்பெண்டாகிய செவிலித்தாயின் கூற்ருக வரும் ஒரு பகுதி இச்சூழ் நிலையில் உன்னத்தக்கது.—

> " மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
> கடம்படாள் காதற் கணவன் கைப்பற்றிக்
> குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
> தடம்பெருங் கண்ணிக்குத் தாயர்நான் கண்டீர்
> தண்புகார்ப் பாவைக்குத் தாயர்நான் கண்டீர் ".

இவ்விடத்தில் மாதவிதன்னைக் "கடம்படாள்" எனக் கூறப்பட்டதற்கு விளக்கமாக அரும்பத உரையாசிரியர் மாதவியைக் கோபித்து வெகுளாளாகிய பெருமையுடையவள் கண்ணகி என்றவாறு எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில்

கண்ணகியின் பெருமைக்குச் சான்ருக மதிக்கப்படும் சாப மிடாமைக்கு மாருக, கதைகளில் வரும் கண்ணகி மாதவி வீட் டிலிருந்த கோவலன் பதுமையை எரியுண்ணச் செய்தாள் என்றும், மதுரையில் இடைச்சி வீட்டில் உணவுப் பண்டங்கள் புழுவாகும்படியும் இடைச்சி வீடு வேகுமாறும் சாபமிட்டாள் என்றும் காண்கிறேம். திரும்பவும் வெந்த வீட்டினை மீட்டுக் கொடுத்தாள் என்றும் அவள் கதையிற் காட்டப்பட்டுள்ளாள். இவற்றினின்றும் முற்றிலும் மாறுபட்ட வகையில் அவளது பெருமை துலங்கும்படி சிலப்பதிகாரம் இயலுகின்றது.

அவ்வாறே கதைகளில் வரும் மாதவி மிக்க இழிதகவுடை யவளாய்க் காட்டப்பட்டிருப்ப, காப்பியத்தில் வரும் மாதவி வியத்தகு பண்புகள் அமைந்தவளாய் உள்ளாள். இளநீரில் ஊறவைத்த களிப்பாக்கும் தங்கச் சிமிழல் மையுங் கொண்டு வந்து மணநாளில் தானே கோவலனை மயக்கியவளாய்க் காட் டப்படுகிருள் கதையில் வரும் மாதவி. அவனுடைய பொருட் செல்வத்தையெல்லாம் துடைத்து வாங்கிக்கொண்டு அவனை அல்லலுறச் செய்து, ஆடைகளைக்கூடக் கழற்றி வாங்கிக் கொண்டு சிங்கக் கிணற்றில் அவனைத் தள்ளிவிட்ட கொடுமை யுடையவளாய் அம்மாதவி உள்ளாள். காப்பியத்திலோ கோவலனிடத்தில் மிக்க மதிப்பும் நேயமும் வைத்தவளா யுள்ளாள் மாதவி. “அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்” என அவனுக்கு அவள் முடங்கல் எழுதியமை நினைக்கத் தக்கது.

இவ்வாறு கதைகளிலும் அண்மைக் காலத்து நாடகங் களிலும் வரும் கண்ணகி கோவலன் மாதவி ஆகியோரைப் பற்றிப் படித்தும் பார்த்தும் மக்கள் பொதுவாக இக் கதைத் தலைவர்களிடம் மதிப்பு வைப்பதேயில்லை. இக்கதைகளில் வரும் கோவலன் கசடன்; கண்ணகி மந்திரவாதி; மாதவி பொருட் பேராசையுடைய கொடுமை மகள்; இவர்களுடைய பொல்லாத இயல்புகளையே சிலப்பதிகாரமும் எடுத்துக்காட்டும் என்று சிலர் தவருக நினைத்துக்கொண்டு காப்பியத்தினுள் நுழைந்து பார்ப்பதே இல்லை. எல்லோருக்கும் எளிய நடையில் இயற் றப்பட்டுள்ள இப்பெரிய எழுத்து உரைநடைக் கதைகளும், பெரிய எழுத்து நாடகப் புத்தகங்களும், இரண்டு மூன்று நூற்ருண்டுகளுக்குள் எழுந்தவை எனத் தோன்றுகின்றன. புகழேந்தி இயற்றியதாகச் சொல்லப்படும் கோவலன் கதைப்

புத்தகத்தில் கண்ணகியாகிய குழந்தையை வைத்துப் பெட்டியின் "எட்டுக் கட்டு கட்டி எதிரே சீலும் இட்டார்" என்று வருகிறது. எனவே, ஆங்கிலேயர் தொடர்பு ஏற்பட்ட காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ஆங்கிலச் சொல்லாகிய "சீல்" (seal) இப்புத்தகத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. இதைப் போன்றுள்ள சில சொல்வழக்குகளால் இக் கதையின் காலம் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தியதன்று என்பது தெளிவாகிறது. எனினும், மக்கள் பொதுவாக உரை நடை நூல்களை விரும்பிப் படிக்கலுற்றதும், பொழுது போக்காக நாடகங்களைப் பார்க்கலுற்றதும் ஆகிய செய்திகளினால் நல்ல இலக்கியமும் நாடகக் காப்பியமும் ஆகிய சிலப்பதிகாரம் அண்மைக்காலம்வரை மறக்கப்பட்டிருந்தது. அது பாச்செய்யுள் வடிவத்தில் இருந்தது வேறு பெரும்பான்மையாகப் படிக்கப்படாமல் இருந்ததற்கு ஒரு காரணம். ஏட்டினிற் பூட்டி வைக்கப்பட்டிருந்த அக்காப்பியம் இந்த நூற்றாண்டில் அதிகமாக வெளிவரத் தலைப்பட்டது. நூல் அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்ட காரணத்தாலும், வித்துவான், எம். ஏ., ஆகிய தேர்வுகளுக்கு இந்நூல் பாடமாக வைக்கப்பட்ட காரணத்தாலும் இதனைப் படித்து ஆய்வு செய்வார் இப்பொழுது நிறைய உள்ளனர்.

கோவலன் கதையை எழுதிய ஆசிரியர் யாவராயினும், அவருக்கு மதுரையினிடத்தில் வஞ்சம் உண்டென்பது மாத்திரம் உறுதியாகிறது. "துரும்பெடுத்து மேற்போடும் துன் மார்க்க மதுரை, கொடியெடுத்து மேற்போடும் கொடிதான தென்மதுரை", என்றும், நிந்தையிட்டுத் தலையை வெட்டும் நீதியில்லாத் தென்மதுரை" என்றும் மதுரையை வினாயகக் கடவுளும், வேத வாத்தியாரும், பாண்டிமா அரசியும் கூறினதாகக் கதை காண்பித்துச் செல்கிறது. இதற்கும் சிலப்பதிகாரம் காட்டும் மதுரைக்கும் எத்துணை வேறுபாடு! கனைத் திறம் உரைத்த காதையில், கோவலன் "மலர்ந்த சீர் மாட மதுரை யகத்துச் சென்று இழந்த பொருள் மீட்டலுற்றேன்" என்றான். புறஞ்சேரியிறுத்த காதையிற் பாடும் பாணர்கள் மதுரையைத் "திருமலி மூதூர்" என்றார்கள். "தனியாக நீ அங்குச் சென்றாலும் தடுப்பாரும் வதைப்பாரும் இல்லை" என்று கோவலனிடம் அவர்கள் கூறினார்கள். கோவலனாலும் கவுந்தியடிகளிடம் "தென்னவர் காக்கும் நாடு செங்கோல் நாடு" என்றும், அங்கு கொடிய விலங்குகள் கூட எவர்க்கும்

துயர்செய்யா என்றும் கூறினமை அக்காதையில் மற்ருேரிடத்திற் கூறப்பட்டுள்ளது:

“பெண்ணணி கோலம் பெயர்ந்த பிற்பாடு
புண்ணிய முதல்வி திருந்தடி பொருந்திக்
கடுங்கதிர் வேனிலிக் காரிகை பொருஅள்
படிந்தில சீறடி பரல்வெங் கானத்துக்
கொள்வ லுளியமுங் கொடும்புற் றகழா.”

எல்லோருக்கும் எளிய கதையும் நாடகமும் பொதுவாக உள்ள பொழுது சிறிது கடுமையான நடையில் இயன்ற சிலப்பதிகாரமாகிய அரும்பெறற் காப்பியம் தமிழ்மக்களுக்கு வேண்டுவதொன்று என்பதை இதுகாறும் எழுப்பிய ஒப்பீட்டினுல் விளக்கினேன்.

இனி, சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளின் போக்கினைப்பற்றி இன்று சில மொழிந்து அமைவேன். இக்கவிஞர் ஒவ்வொரு சூழ்நிலைக்கேற்பப் பொருத்தமான சொற்களை அமைத்துத் தருபவர் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக “நோற்றுணல் யாக்கை நொசிதவத்தீர்” என்று கவுந்தியடிகளைப் பார்த்து வம்பப் பரத்தையும் வருமொழியாளனும் கூறியதைக் காட்டலாம். துறவியாகிய கவுந்தியடிகளுடைய உடம்பு மெலிந்து இருந்ததென்ற செய்தியை இச் சொற்ருெடர்கள் நன்ருகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவர் அமைத்த கூற்றிலேயே இக்கருத்து அடங்கக்கண்டு இன்புறலாம் அல்லவா? இளங்கோவடிகளைத் தேடிச் சொற்கள் பல வருகின்றன. அவற்றுள் சிலவற்றையே அவர் தேர்ந்தெடுத்துக்கொண்டு தம் காப்பியத்தில் வழங்கி அவற்றிற்குப் பெருமையளித்து விடுகிருர். கணவனை இழந்த கண்ணகி மதுரைக்குத் தீயூட்டிய பிற்பாடு இழந்த கணவனைப்பற்றி நினைத்து உள்ளங்கனன்று பெருமூச்சுவிட்டுச் செல்லும் நிலையில் அவள் எங்குச் செல்லுகிருள் என்பது அவளுக்குத் தெரியாது, யாது செய்கிருள் என்பதும் தெரியாது. இதனைச் சொல்ல நினைத்த கவிஞர்,

“மறுகிடை மறுகும், கவலையிற் கவலும்
இயங்கலும் இயங்கும், மயங்கலும் மயங்கும்”

என்றே கூறினர். அவளது உள்ளம் மயங்கிய நிலையை வேறு எந்த விதத்திலும் காட்டியிருத்தல் ஆகாது. அவள்

இப்பொழுது பெருந்தெருவிற் செல்லுகிறாள், இப்பொழுது குறுந்தெருவிற் செல்கின்றாள், இப்பொழுது நடக்கிறாள், இப்பொழுது மயங்கிக் கிடக்கிறாள்" என்று கூறுவதுபோல் இவர் அமைத்த சொற்றொடர்கள் உள்ளன. 'கவலையிற் கவலும்' என்று வந்த சொற்களே திரும்ப வந்தனவாயினும் வெவ்வேறு பொருளில் வந்து கவிக்கு உயிரளிக்கின்றன. இயங்குகிறாள் என்று சொல்லாமல் இயங்குகிறதைச் செய்கிறாள் என்றமையான் நடக்கமாட்டாமல் நடக்கிறாள் என்ற குறிப்பு கிடைக்கப் பெறுகிறோம். மயங்கிக் கிடக்கிறாள் என்று கூறாமல் மயங்கலும் மயங்கும் என்றமையால் ஓரளவு மயக்கமும் ஓரளவு நல்லுணர்வும் உடையவளாய் அவள் இருக்கிறாள் என்ற குறிப்பு கிடைக்கப்பெறுகிறது. பெருந்தெரு என்ற பொருளையுடைய மறுகு என்ற சொல்லிற்குப் பின்னால் மயங்கிச்செல்கிறாள் என்ற கருத்தினை மறுகும் என்ற சொல்லில் வைத்து, அந்நேரம் அச்சொல்லுக்கு ஒரு தனி ஆட்சி தந்த பெருமை இளங்கோவடிகளது ஆகிறது. குறுந்தெரு என்ற பொருளுடைய கவலை என்ற சொல்லைப் பெய்த கவிஞரின் திறம் வியக்கத்தக்கது.

> "மறுகிடை மறுகும் கவலையிற் கவலும்
> இயங்கும் இயங்கும் மயங்கலும் மயங்கும்"

என்ற அடிகளைப் படிக்கும்பொழுதே கண்ணகியுற்ற அருந்துயர் தானாகத் தெளி[illegible]கிறது. இவ்வாறு உலகிற் கவிகளை அமைக்குந் திறம்வாய்ந்த கவிஞர்கள் எண்ணிக்கையிற் சிலரே ஆவார்கள். அவர்தம்முள் ஒருவராக இளங்கோவடிகளுக்குப் பெரியதோர் இடமுண்டு. இதனை ஒத்ததே கட்டுரைக் காதையில் வரும்.

> "அவல என்னாள் அவலித்து இழிதலின்
> மிசைய என்னாள் மிசைவைத்து ஏறலின்"

என்னும் பகுதி. பள்ளம் என்றும் மேடு என்றும் பாராமல் கண்ணகி பதறிச் செல்லுகிறாள் என்பதை ஒலிநயம்படக் கவிஞர் கூறிவிட்டார். அவலம் என்பது பள்ளம், மிசை என்பது உயரம், 'அவலித்து இழிதல்' என்பது வருந்தி இறங்குதல், 'மிசைவைத்து ஏறல்' என்பது மேலே அடிவைத்து ஏறுதல் என்றெல்லாம் விளக்கஞ் சொல்ல வேண்டாமென்று கருதுகிறேன்.

கையினுல் தொழுது மனத்தினுல் நினைத்து நாவினுல் வந்தித்து என்று சொல்லுவது உரைநடைமுறை. கவியில் இக்கருத்துக்களை எவ்வளவு அழகாகவும் செறிவாகவும் சொல்லுவது இயலும் என்பதற்கு இளங்கோவடிகள் காடுகாண் காதையில் அமைத்துள்ள ஒரு முறை சிறந்த எடுத்துக்காட்டு.

" ஓங்குயர் மலையத்து உயர்ந்தோற் றெழுது
சிந்தையில் அவன்றன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால் "

என்று மாங்காட்டு மறையவன் வாக்கினில் வைத்துப் பேசும் இளங்கோவடிகள் சிந்தையில் கடவுளது திருவடிகளை வைத்து என்றுகூறியவகையால் சிந்தனையால் நினைத்து என்பதுபெறப் பட்டது. நெடியவனைத் தொழுது என்று முற்கூறியமையால் மெய்யினுல் வணங்கினமை கூறப்பட்டது. மும்முறை வந்தனையோடு மலையைச் சுற்றிவந்தால் என்று கூறியவிடத்து நாவினுல் துதிசெய்து மலையைச் சுற்றி வந்தால் என்ற கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு திட்பநுட்பமாகச் செய்யுட் செய்ய வல்லவர் இளங்கோவடிகள் என்பது இதனுற் புலப்படும்.

இளங்கோவடிகளுடைய செய்யுட் போக்கே ஒரு தனி வகை. தேவந்திகை கண்ணகிக்குக் கூறினுள் என்று சொல்ல வேண்டியவிடத்தில் " அணியிழைக்கு அவ்வாயிழையாள் கூறினுள் " என்று கவிஞர் கூறும்போது இடம்நோக்கி அணியிழையும் ஆயிழையும் யாவர் யாவர் என்பதை முடிவு செய்து கொள்கிறோம். அவ்வாறே,

" மாசில் கற்பின் மனைவியோ டிருந்த
ஆசில் கொள்கை அறவிபால் அணைந்தாங்கு "

என்றவிடத்தில் அறவி என்பது கவுந்தியடிகளைக் குறிக்குஞ் சொல் என்று எளிதில் அறிந்துகொள்கிறோம். வையை ஆற்றைக் கடந்து எனச்சொல்லவிருக்குந் தறுவாயில் கண்ணகியும் கோவலனும் வையை ஆற்றினைத் தொழுதனர் என்று கூறக் கருதிய கவிஞர்

" அனநடை மாதரும் ஐயனுந் தொழுது "

என்று கூறினுர். ஐயன் என்பதால் கோவலனும், அன்ன நடையுடைய மாதர் என்றமையால் கண்ணகியும் எனப்

பொருள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் இடத்தோடு பொருந்தச் செய்து கவி அமைத்த திறம் இடங்கோவினது. கவுந்தியடிகள் வையை ஆற்றைத் தொழவில்லை என்ற குறிப்பு தொழுதவர் அன்ன நடையையுடைய மாதர் என்று கூறினமையால் கிடைக்கப்பட்டமை அறிக. கண்ணகியை என்று கூறவேண்டிய இடத்தில் 'கணவனோடிருந்த மணமலி கூந்தலை' என்று பிறிதோரிடத்தில் (இவர் பேசிய வகையானும், கண்ணகிக்கு என்று கூற வேண்டியவிடத்தில்

"கோவலன் தன்னோடும் கொடுங்குழை மாதொடும்
மாதவத் தாட்டி"

சென்றமையைக் கூறிய வகையானும் அவரது தனித்திறன் தெளிவாகிக் கொண்டு செல்லுகிறது. மற்றோரிடத்தில் கண்ணகியும் கவுந்தியடிகளும் என்று சொல்ல வேண்டியபோழுது

"கருந்தடங் கண்ணியும் கவுந்தியடிகளும்
வகுந்துசெல் வருத்தத்து வழிமருங்கு இருப்பு"

என்று கூறியிருக்கின்றார் என்பதை உற்று நோக்குவோமாயின் இவரது தனிப்போக்கு விளங்காமலிராது.

கவிஞர் கூறும் சாதாரண சொற்களின் கிடக்கையினாலே ஒருவிதத் தனியின்பம் உண்டாதல் காண்கிறோம்.

"பொன்னிற் பொதிந்தனன் புனைபூங் கோதை
என்னுடன் நங்கை இருக்கெனத் தொழுது"

என்ற இடத்தில் "என்னுடன் நங்கையிருக்க" என்று கண்ணகியை நோக்கி மாதரி கூறியதிலுள்ள அருமைப் பாட்டினை ஒவ்வொருவரும் எளிதில் அறிந்துகொண்டு மகிழ்தல் கூடும். நாம் அறிந்த சொற்களையே கவிஞர் பயன்படுத்தி நாம் எதிர் பாராத ஒரு விளைவினை மாயமாக எவ்வாறோ செய்து விடுகின்றார் என்பது இளங்கோவடிகளினுடைய பல சொல்லமைப்புக்களினால் விளங்கும், சங்கமனை இழந்த நீலி பேசியதாக வரும் பேச்சில்,

"அரசர் முறையோ? பரதர் முறையோ?
ஊரீர் முறையோ? சேரியீர் முறையோ"

என்றும்,

"எம்முறு துயரஞ் செய்தோர் யாவதும்
தம்முறு துயரம் இற்றுருக"

என்றும் கூறினுளென்பதுபோல் அமைந்திருக்கும் இடத்திற் சொல் ஒவ்வொன்றும் தனிப் பெருமையுற்றுத் திகழ்ந்து விளக்கும் விளைவு உன்னதத்தக்கது, சிலவிடங்களில் கவிஞர் கதையின் உறுப்பினர்களின் சொற்களாலும் செயலாலும் நாடகமே அனைய விளைவுகளை விளைத்துள்ளார் என்பது அறியப்படும். எடுத்துக்காட்டாக, ஒன்றினைக் கூறுவேன்.

"காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்
கோவலன் என்றுளோர் குற்றிளையாள்" [3]

என்று வரும் இடத்தில், கண்ணகியின் தோழி சிறிது தொலைவில் வந்தவனை அரசன் என ஐயுற்று நின்ற நிலையையும், அவன் கண்ணகியின் இல்லத்தின் மருங்கணைந்த விரைவினையும், அத்தெருவில் வந்தவன் காவலன் அல்லன் கோவலனே என்ற மகிழ்ச்சியையும் இரண்டு அடிகளிற் படம்பிடித்தாற் போலக் காட்டியுள்ள நயம் வியக்கத்தக்கது. 'காவலன் போலும்' என்று கூறக் கருதிய தோழி சிறிது தொலைவிற் பார்த்தமையால் ஐயங்கொண்டாள் என்பதும், கடைத்தலையான்' என்றமையால் விரைவின் வந்து கடைவாயிற் புகுந்துவிட்டான் என்பதும், நம் கோவலன் இங்கு வந்துற்றநால் உனக்கும் எங்களுக்கும் பெருமகிழ்ச்சி எனத் தோழி தெரிவிக்கிருள் என்பதும் ஆகிய செய்திகளை உள்ளடக்கிக்கொண்டு இவ்விரண்டு அடிகளும் நிற்றலை அறிஞர்கள் அறிந்து பாராட்டுவர் எனக் கருதுகிறேன்.

இளங்கோவடிகள் எண்சுவையும் ததும்பக் கவி செய்வதில் வல்லவரென்பதைச் சிலப்பதிகாரத்தைக் கற்றுணர்ந்தவர்கள் அறிவார்கள். சிறப்பாக, அவலச்சுவையைச் சில விடங்களில் அவர் படம்பிடித்துக் காட்டும் முறைகள் கருதத் தக்கவை. புறஞ்சேரியிறுத்த காதையிலேயே அவலச்சுவை தொடங்கிவிடுகிறது. இது துன்பமாலையில் உச்சநிலை அடைகிறது. கண்ணகியினுடைய துன்பம்

"சொல்லாடாள் சொல்லாடா நின்றுள் அங் நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடுந் தான்"

என்ற இடத்துக் கவிஞரால் தடுமாற்றத்துடன் எடுத்து இயம்பப்படுகிறது. மாதரி நீராடச் சென்றுவிட்டாள் என்றும்,

3 கனாத்திறம் உரைத்த காதை 65-66

அவளையொத்த சாயலையுடைய அவள் மகள் ஐயை ஊரில் ஏதோ அரவங்கேட்டு விரைவுற்று வந்தாள் என்றும், "துன்ப மாலை" என்னும் காதை தொடங்குகிறது. ஊர் அரவங் கேட்டு வந்தவள் ஐயை அல்லள் என்றும், வேறொரு பெண்ணென்றும் விளம்புவாரும் உண்டு. அவ்வாறு வந்தவள் யாவளாயினும், அவள் சொல்லாடாமல் நின்றாள் என்பதும் ஆயினும் சொல்லாடினாள் என்பதும் இங்கே கூறப்படுஞ் செய்திகள். இவ்வடிகளில் "சொல்லாடாள்" என்று ஒருபக்கங்கூறிச் சொல்லாடும் என்று மறுபக்கம் கூறியமையால் அமைந்துள்ள முரண்டொடையைப்பற்றி நாம் கவலை கொள்ளவில்லை. அந் நங்கைக்கு என்பது கண்ணகிக்கா வந்த பெண்ணிற்கா என்பதில் பெரும் ஐயப்பாடு உண்டு. ஓடோடி வந்தவள் கண்ணகிக்குச் சொல் கூறினளா அன்றிச் சொல்லாடாமல் நின்ற அந்த நங்கையிடம் கண்ணகி சொல்லாடினளா என்பது இன்றும் ஆராய்ந்து முடிவுகட்டப்படாத செய்தியாகும். இவ்வாறு முடிவு கட்ட முடியாத நிலையில், நம்மைத் திகைக்க வைக்கும் நிலையில், இவ்வடிகள் அமைந்துள்ளமையே கவிஞரின் திகைப்பைத் தெள்ளிதின் எடுத்துக்காட்டுந் தகையது என்று கூறிவிடுதல் கூடும். சிறந்த கவிஞர் தம் சொற்றிறத்தால் அவ்வந் நேரத்திய உணர்ச்சியைத் தம் செய்யுள் வழியாக அமைத்துக் கட்டிவிடுவர் என்பதற்கு இது பெரியதொரு சான்று.

> "சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந்நங்கைக்குச்
> சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்"

என்ற அடிகளைப் படிக்கும் நாம் படிக்க வேண்டிய முறைப்படி படிப்போமேயானல் கேட்போரிடத்திலும் அத்திகைப் புணர்ச்சியை ஊட்டிவிடுதல் கூடும். இங்ஙனம் செய்வது தான் கவிதையைப் படிப்பிக்கும் நோக்கங்களில் தலைசிறந்த நோக்கம்.

இருண்ட இடங்களிலும் பொலிவு காணும்படி செய்யக் கூடிய கவிஞர் சிறந்த கவிஞரென மதிக்கப்படுவதுண்டு. இளங்கோவடிகள் அவ்வரிசையில் வைத்து எண்ணத்தக்கவரென்பதைப் பலர் அறிவர். மாண்டுபோன கணவனைக் கண்டு துயர்பொறாமல் அவலித்து இரங்கி அவள் அழுதபோது அவள் அழுகையினூடே அவளது வடிவழகினைக் கவிஞர் இழைத்துத் தந்துள்ள திறம் உன்னத்தக்கது. தேவதூதர்கள்

அழுதலைக் காண்பதுகூட அழகிது என்பார்கள் ஆங்கிலேயர் சிலர். கண்ணகி கணவனை நினைத்து "எங்குற்றாய்" என ஏங்கி மாழ்கும் நிலையில் "எழுந்தாள் விழுந்தாள் செங்கண் சிவப்ப அழுதாள்" என்று அவளைப்பற்றிக் கவிஞர் உரைத்தார். அதே நேரத்தில் "கதிர்களைப் பொழியுந் திங்கள் மேகத்தோடும் கீழ்நிலத்திற் பொருந்தினலொப்பக் கூந்தல் விரிந்துகிடந்த கோலத்தோடு அமைந்திருந்தது அவள் முகம்" என்று கூறியதில், அவல நிலையிலும் ஓர் அழகுணர்ச்சி தோன்றுமாறு கவிஞர் செய்துள்ளாரென்பது அறியப்படும். இதனை அடியில் வருஞ் செய்யுள் தாங்கியுள்ளது:—

> "பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
> திங்கள் முகிலோடும் சேணிலங் கொண்டெனச்
> செங்கண் சிவப்ப அழுதாள், தன்கேள்வனை
> 'எங்கணு அ' என்ன இனைந்தேங்கி மாழ்குவாள்" [4]

இளங்கோவடிகளின் எழுத்துப்போக்கில் இன்னொரு செய்தி வெளியாகிறது. எண்களை ஒன்றுெடொன்று உறழ்ந்து கூறும் இயல்பினர் அவர் என்பது சிலவிடங்களால் விளங்குகிறது. "ஆறு காவதம்" என்று சொல்ல வேண்டியவிடத்தில் "இருமுக் காவதம்" என்று கட்டுரைக் காதையில் (வரி 145) அவர் கூறியுள்ளார். ஆறு காவதம் என்று கூறாமல் இருமுக்காவதம் என்று சொன்னமையால் கிடைக்கப் பெற்ற வேறொரு கருத்து எதுவுமில்லை. "இரு முக்காவதம்" என்றும் "செருவெல் வென்றி" என்றும் எதுகை நயம்பட இவ்விடத்தில் அமைந்து கிடக்கின்றன என விடுவதே பொருந்தும். செங்குட்டுவன் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னரும் அறக்கள வேள்வி செய்யாமல் மறக்கள வேள்வி செய்தான் என்று எடுத்துக்கூறிய மாடல மறையவன் கூற்றில் ஐம்பதுஎன்பது "ஐயைந்து இரட்டி" எனக் கூறப்பட்டுள்ளது. ஈண்டு "வையங் காவல் ஐயைந்து இரட்டி" என மோனைத் தொடை இயன்றமை காண்க. தேவந்திகைபொடு சாத்துவன் எட்டாண்டு உறைந்து நீங்கினன் என்றசெய்தியைச் செங்குட்டுவனுக்கு மாடலன் சொல்லுமிடத்தில் எட்டு என்பதற்குப் பதில் "நாலீராண்டு" எனச்சொல்லப்பட்டுள்ளது. இவற்றோடு சேர்த்து நோக்கினல், புகாரிலிருந்து மதுரைக்கு முப்பது காதம் தொலைவு உண்டென்று கண்ணகியிடம் நேர்முகமாகக்

4 துன்பமாலை 30-33

கூறத் தயங்கிய கோவலன் " ஆறைங் காதம் " எனக் கூறி ஞன் என்று எடுத்துக்காட்டுவது எத்துணைப் பொருத்தமுடைத்து என மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம். முப்பதுகாதம் என்று சொன்னல் அவள் பெருவருத்தமுறுவாள் எனக் கருதி ஆறு-ஐந்து என்று வைத்துப் பேசினுன் எனக் கூறப்பட்டுவரும் கருத்து ஆயத்தக்கது.

இளங்கோவடிகளின் மற்றெரு போக்கில் "கொள்கை" என்ற சொல்லை அவர் விரும்பியாளும் இயல்பினரென்பது புலப்படுகின்றது.

மாங்காட்டு மறையவன் கோவலனுல் 'யாது நும் ஊர்' என வினவப்பட்டபொழுது "குன்றச் சிறப்பின் மாமறையாளன்" என்று பேசப்பட்டுள்ளான்.[5] மாதவி தந்த ஓலையைச் சேர்ப்பிக்கும் நோக்கத்தோடு சென்ற கோசிகன் தான் வந்த செய்தியைக் கோவலனிடம் தெரிவிக்கத் தொடங்கினுன் எனக் கூறுமிடத்தில்.[6]

" கோசிக மாணி கொள்கையின் உரைப்போன் "

எனக்கூறப்பட்டுள்ளான். மதுரையம்பதியைக் கண்டு வருவதாகச் சொல்லிப்புறப்பட்ட கோவலன் கவுந்தியடிகளை வணங்கிச்சென்றான் என்றவிடத்தில்

" கோவலன் சென்று, கொள்கையின் இருந்த
காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி "

எனக்கூறப்பட்டுள்ளான். இவ்விடத்தில் 'கொள்கையின் இருந்த காவுந்தி ஐயை' என்ற சொற்றெடர் வந்திருப்பதை நோக்குக. [7]அடைக்கலக் காதையிற் பேசப்படும் குரங்கு ஒன்று தன் சிறு கையை மறுபிறவியிற் கொண்டொரு பாகத்திற் கொள்கையாக வைத்துக் கொண்டிருந்ததாகக் கூறியவிடத்தில் வேண்டுமானுல் "கொள்கையின் புணர்ந்து" என்பதற்கு ஓரளவு தனிப் பொருள் வருவிக்கலாம். ஆயினும், மாதரி தன் மனையிற் புகுந்தாள் என்று சொல்ல வேண்டிய அடைக்கலக் காதையின் கடைப்பகுதியில் " கோவலர் மடந்தை கொள்கையிற் புணர்ந்து மனைபுக்கனள்" என்னும் பொருளில்

---

5 காடுகாண் காதை 33-34
6 புறஞ்சேரியிறுத்த காதை 56
7 ஊர்காண் காதை 15-16

" வாயில் கழிந்து தன்மனை புக்கனளால்
கோவலர் மடந்தை கொள்கையின் புணர்ந்தென் "

எனக் கூறப்பட்டிருப்பதால் வருஞ் சிறப்பு ஒன்றுமில்லை. பிறிதோரிடத்திலும்,

" குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து
படுங்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்கு "

என வருவதிற் காணுங் கொள்கை என்ற சொல் சிறப்புப் பொருள் எதுவும் பெறவில்லை. அவ்வாறே,

" திருந்துகோல் நல்லியாழ் செவ்வனம் வாங்கிக்
கோவலன் தன்னொடும் கொள்கையின் இருந்தனள்
மாமலர் நெடுங்கண் மாதவி தானென் "

என்னுமிடத்து, மாதவி யாழினை வாங்கிக் கோவலனோடு கடலோரத்தில் தங்கியிருந்தாள் என்று கூறுங்கால் "கொள்கை" என்ற சொல்லுக்குத் தனிப்பொருள் எதுவும் இல்லையென்பது அறியப்படும். இவ்வாறு, " கொள்கையின் " என்ற சொல்லைச் சேர்த்துப் பேசுவது இளங்கோவடிகளுக்கு ஓரியல்பாகி விட்டது போலும், அது பெரும்பாலும் மோனை நயம்தோன்ற வரும் இடங்களிற் கையாளப்பட்டுள்ளது என்பதை ஊன்றி யாராய்வோர் அறிதல் கூடும். இங்ஙனம் இருப்பவும்,

" குன்றாக் கொள்கைக் கோவலன் தன்னுடன்
அன்றைப் பகலோர் அரும்பதித் தங்கிக்
கண்டடி பணிய நீபோ யாங்களும் நீணெறிப்
படர்குதும் "

என்றவிடத்திற் கோவலனைக் " குன்றாக் கொள்கையுடையவன் " எனக் கூறினமையால் கோவலன் குற்றமற்றவன் என்றோ ஒழுக்கம் தவறியவனல்லன் என்றோ அறுதியிட்டுக் கூறுதல் ஒவ்வாது. அவனுடைய குணங்களையும் குற்றங்களையும் நாடி அவன் நல்லவனா அல்லவனா என்று முடிவு செய்ய வேண்டுமேயொழியக் கவிஞர்தம் வாக்கில் " குன்றாக் கொள்கைக் கோவலன் " எனக் கூறியதொன்றினையே வைத்துக் கொண்டு அவன் நல்லியல்பினன் என முடிவுகட்டுதல் கூடாது என்பதை ஆராச்சியாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இளங்கோவடிகளுக்கு இயற்கைப் பொருட்களில் பெரிய தோர் ஈடுபாடு உண்டு. சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில் வருகிற

“ கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
யோவிறந் தொலிக்கும் ஒலியே யல்லது
ஆம்பியுங் கிழாரும் வீங்கிசை யேத்தமும்
ஓங்குநீர்ப் பிழாவும் ஒலித்தல் செல்லாக்
கழனிச் செந்நெற் கரும்புசூழ் மருங்கிற்
பழனத் தாமரைப் பைம்பூம் கானத்துக்
கம்புட் கோழியுங் கனைகுரல் நாரையுஞ்
செங்கால் அன்னமும் பைங்காற் கொக்குங்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும் ”[8]

என்னும் வருணனையிற் காணப்படும் ஒலிகளின் ஈட்டம் எத்துணை இன்பந் தருகிறது! இவ்விடத்தில் நாம் அறிந்த கோழியும் நாரையும், அன்னமும் கொக்கும், காக்கையும் பிற பொருள்களும் செய்யுளமைப்பிற் சிறந்த சிறந்த இடங்கள் பெற்று இன்பந்தரும் தகையனவாக உள்ளன.

இளங்கோவடிகள் வையை ஆற்றைப் பெண்ணாக உருவகித்து அழகியதொரு வருணனையைப் புறஞ்சேரியிறுத்த காதையில் அமைத்துள்ளார்.[9] இவ்வையை என்னும் பெண் கண்ணகிக்கு நாளை வரவிருக்கும் துயரத்தைத் தான் அறிந்து வருத்தமுற்றவள்போல முட்டாக்கிட்டுக்கொண்டு கண்ணீர் சொரிந்து சென்றவள்போலக் கவிஞர் கூறிய அழகு நினைக்கத் தக்கது.

“ வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போற்
புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
அனநடை மாதரும் ஐயனுந் தொழுது ”

என்றவிடத்தில், இயல்பில் வையை என்ற ஆற்றில் புது வெள்ளத்திற் பல பூக்கள் மேலே படிந்து வருகின்ற செய்தி

8 வரிகள் 107-117
9 அடிகள் 159—170

யையும், அவற்றிற்கு உட்பட்ட வகையில் நீர்நிறைந்து வந்த தாயினும் மேலே உள்ள பூப்போர்வையால் அந்நீர் மறைந்து கிடந்தமையையும் கவிஞர்

"புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"

என்ற வகையாற் புலப்படுத்தினர். இயல்பாக இயற்கைப் பொருளில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, அதனடியாக மக்களுடைய உணர்ச்சியை அவ்வியற்கைப் பொருளுக்கு ஏற்றி அமைக்குந் திறமுடைய கவிஞர் பல ராயினும், அப்பலருள் இளங்கோவடிகளுக்கு உயர்ந்ததோர் இடமுண்டு. குவளையும் ஆம்பலும் கமலமும் கண்ணகியும் கோவலனும் நாளை பிரிக்கப்பட்டுத் துயருறுவார்கள் என்பதை அறிந்தனபோலக் கண்ணில் நீர்கொண்டு கால் மிகவும் நடுக்க முற்றன என்று கவிஞர் கூறியவிடத்திலும் இந்நிலையைக் காணலாம்.

"கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலுங் கணவனுந் தனித்துறு துயரம்
ஐய மின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க"

என்னும் வருணனையிற் குவளையும், ஆம்பலும், கமலமும் தத்தம் இடத்தில் நீர்கொண்டு நின்றன என்பதையும், காற்று வந்து பொருந்த அசைந்தன என்பதையும் ஒரு பக்கம் இயற்கை நிகழ்ச்சியாகக் கூறி, மறுபக்கம் கண்ணில் நீர் கொண்டு கால் மிகவும் நடுங்கலாயின என்று பொருள் கொள்ளுமாறு அமைத்த கவிஞரின் திறம் வியக்கத்தக்கது. "கண்ணீர் கொண்டு காலுற நடுங்க" என்பதன்கண் உள்ள சிலேடை நயத்தை உணர்ந்து நாம் மகிழ்தல் இயலும். இளங்கோவடிகளுக்கு இயற்கைப் பொருள்களின்கண் இருந்த ஈடுபாட்டிற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டுத் தரலாம்:—

"ஏழகத் தகரும் எகினக் கவரியும்
தூமயி ரன்னமுந் துணையெனத் திரியும்
..........................................
நீணெடு வாயில் நெடுங்கடை கழிந்து"

கண்ணகி கணவனுடன் புகார் நகரத்தில் இல்லத்தினின்றும் வெளியே புறப்பட்டு வந்தவள் எவ்வாறு வாயில்நெடுங்கடை

கடந்தனள் என்பதைக் கவிஞர் கூறுமிடம் இது. அந்த வாயிலில் ஆடுகளும் கவரிமான்களும் அன்னங்களும் ஒன்றிற்கொன்று துணை என்றாற்போலத் திரிந்துகொண்டு இருந்தன என்பதும், அவ்வாயிலைக் கடந்து கண்ணகி போயினள் என்பதுஞ் சாதாரணம். அவ்வாயிலின்கண் தகர்வடிவத்திலும் மான்வடிவத்திலும் அன்னவடிவத்திலும் எழுதப்பட்டுள்ள ஓவியங்களைப் பார்த்து உண்மைத் தகர்களும் கவரிகளும் அன்னங்களும் அவற்றைத் தம் இனம் எனக் கருதி அங்கேயே திரிந்துகொண்டு இருந்தன எனக் கூறுவது மேலும் இனிமையானது. இதனினும்பார்க்க இனிது அவ்வாயிலில் திரிந்துகொண்டிருந்த எழில்விலங்குகளும் பறவைகளும் கண்ணகியைத் தம் இனம் எனக்கருதி அவளோடு அங்கேயே திரிந்துகொண்டு வழியனுப்பத் தயங்கின எனக் கூறுவது. இவ்வாறெல்லாம் பொருள்படும்படி கவிஞர் அமைத்த இச்செய்யுட் பகுதியிலிருந்து அவருக்கு இயற்கைப் பொருட்களின்கண் இருந்த ஈடுபாடும் கவின்கலையின்கண் உள்ள கவர்ச்சியும் நன்ருக விளங்கும்.

# II. "சிலப்பதிகாரத்திற்கு முந்திய தமிழிலக்கியம்"

(19—2—1964)

சிலப்பதிகார காலத்திற்கு முன் எழுந்த தமிழிலக்கியங்களுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடையேயுள்ள சில ஒற்றுமைவேற்றுமைகளைக் குறித்து இன்று பேசுவேன்.

குறுந்தொகையில் செவிலித்தாய் கூற்ருக வரும் ஒரு செய்யுளின் கருத்தோடு கண்ணகி சமைத்துக் கணவனுக்கு இட்ட செய்தி ஒப்பிடத்தக்கது. கட்டித்தயிரைப் பிசைந்து மெல்விரல்களைக் கழுவாமலே விரைவில் நழுவும் தன் மேலாடையை எடுத்து உடுத்திக்கொண்டு தாளிப்புப்பதங் கெடாமல் தலைவி ஒருத்தி தயிர்க்குழம்பு சமைத்துக் கணவனை உண்பித்து மகிழ்வித்த செய்தி குறுந்தொகையில் உண்டு. தாளிப்புப்புகை அத்தலைவியின் கண்களிற் புக்கதற்கு இரங்குவார்போலக் கவிஞர் பாடியுள்ளார் என்பது

"குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்"

என வருவதால் விளங்கும். கண்ணகியும் தன் மெல்விரல் சிவக்கும்படி பல பசுங்காய்களை அரிந்து முகம்வியர்க்கக் கண் சிவக்கச் சமையல் செய்து கணவனை ஊட்டினுள் என்பது சிலப்பதிகாரக் கொலைக்களக் காதையிற் சொல்லப்பட்டுள்ளது. அவள் விரல்களின் மென்மையைக் குறிப்பினுல் விளக்குவாராகிக் கவிஞர் அவள் அரிந்த வெள்வரிக்காய் மாதுளங்காய் போன்றவை அரிவாள் மணையில் சிக்கிக் கொண்டிருந்தன போற் குறிப்பிட்டுள்ளார். இக்காய்களை அவள் நெடுநேரம் அரிந்தாள் அல்லது அரிவதற்குத் திணறினுள் என்று கூறுவது உரைநடை, "கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்ய" என்று கவிஞர் கூறியிருப்பதுபோலக் கூறுவது கவிதை. அரிவாள்மணையில் அரிந்தாள் என்று சொல்லவேண்டிய இடத்தில் இவ்வாறு நீளமாகக் கவிஞர் கூறியதிலிருந்து

அரிதற் செயலிற் ஏற்பட்ட நெடுநேரத்தை அவர் குறிப்பு வகையினல் விளங்கவைத்தார் என்பது புலப்படும். குறுந் தொகைச் செய்யுளில் வந்த தலைமகள் தாளிப்புப் புகையினல் ஒரு பக்கம் வருந்தினுள் என்று கூறப்பட்டிருப்பதுபோல இத்தலைமகள் அட்டிற் கரிப்புகை கண்டு வருந்தினுள் என்று கூறப்பட்டிருக்கிருள்.

குறுந்தொகையில் மற்ருெரு தலைவி பரத்தையர் வீட்டிற் குச் சென்று திரும்பிய தலைமகனை வெறுத்து அன்புகாட்ட மறுத்ததாக வருஞ் செய்யுள் உண்டு. ஒக்கூர் மாசாத்தியார் பாடிய அப்பாட்டினுள் [10].

"இன்ன திசைக்கும் அம்பலொடு
வாரல் வாழியர் ஐய ! எந் தெருவே"

என்று வருகிற குறுந்தொகைப் பகுதிக்கு மாருகக் கண்ணகி யின் திறம் உள்ளது. கணிகையாகிய மாதவியிடமிருந்து மீண்ட தன் கணவனைக் கண்ணகி வரவேற்ருள் என்பதும், அவன் வறுமைக்கு இரங்கி இன்முகங் காட்டி முறுவல்பூத்து "சிலம்புகள் உள்ளன, எடுத்துக் கொள்ளுங்கள்" என அன் புடன் அளித்தாள் என்பதும் சிலப்பதிகாரம் காட்டும் நய முடைய செய்திகள்.

கலித்தொகையில்,

"பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தமை
நோவேன் தோழி கடன்நமக் கெனவே"

என்று கூறிய தலைவி ஒருத்தியின் மனநிலையோடு கண்ணகி யின் மனநிலை ஒத்திருப்பதை அறிதல்கூடும். கோவலன் மதுரையில் தங்கிய நாளிற் கண்ணகி அருமையாகச் சமைத்து ஊட்டி மகிழ்வித்தவுடன் கோவலன் அவளுக்குத் துயரிழைத் தமையை நினைத்துச் சில சொற்கள் சொல்ல, அவள் அவனது பரத்தைமையை நோவாமல் உடனிருந்து வந்தமையைக் குறிப் பாகக் கூறினள்.

"சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டெழுகென
எழுந்தாய் என்செய்தனை !"

என்று கோவலன் கூறக் கண்ணகி

10 குறுந்தொகை-செய். 134

"போற்று ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்று உள்ள வாழ்க்கையேன் ஆகலின்
ஏற்றெழுந்தனன் யான்"

என்று கூறினள். கோவலன் மாதவியிடத்துக் கொண்ட மையலுக்காகத் தான் உள்ளத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்பதையும், மாற்றிக்கொள்ளாத உள்ளத்தொடு வாழ்ந்து வரும் வாழ்க்கையுடையவள் தான் என்பதையும் அழகாகக் கண்ணகி புலப்படுத்தினள்.

தலைமகள் ஒருத்தி களவுகாலத்தில் வரையாது வந்தொழுகும் தலைவனிடத்தில் எத்துணை அன்புடையவளாக இருந்தாள் என்ற செய்தியையும் அவளது கற்பு மிகுதியையும் ஆற்றமை யையும் தோழி எடுத்து விளக்கியதாகக் குறிஞ்சிக்கலிச் செய்யுள் ஒன்று கூறுகிறது.

"நோயட வருந்தியும் நீசெய்த அருளின்மை
ஆயமும் மறைத்தாள் என்தோழி யதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூறல் தானணி" [11]

என வருந் தாழிசையோடு ஒத்து அடுக்கிவரும் தாழிசைகள் எல்லாம் தலைவனைப் பிறர் பழிகூறலாகாது என்ற விழுமிய நோக்கத்தால் துயரத்தை மறைத்து வெளியிற் காட்டாமல் அத்தலைமகள் இருந்தாள் என்பதைப் புலப்படுத்தும். கண்ணகியும் அவ்வாறே தன் மனத்துயரைப் பிறர் அறியாமற் பாதுகாத்தாள் என்பது சிலப்பதிகாரத்திற் சொல்லப்பட்டுள்ளது. கண்ணகி தன் கணவனுடைய தாய்தந்தையர்கள் தனது துயரத்தை அறியாமல் அரிதின்முயன்று பாதுகாத்துள்ளாள். இதனை அவளே கோவலனிடத்திற் பின்னர்க் கூறுகின்றாள். "நுங்கள் தந்தையார் அன்புள்ளத்தோடு அருள் மொழிகள் நிறையக் கூறி என்னைப் பாராட்டவும், நான் என்னுடைய அகத்தில் ஒளித்துவைத்துக் கொண்டிருந்த நோயையும் துன்பத்தையும் வெளிப்படுத்துவதுபோல் என் பொய்ச் சிரிப்பு இருந்து விட்டது! நான் சிரிக்குஞ் சிரிப்பு உண்மையல்லாத சிரிப்பு என்பதை அவர் உணர்ந்து கொண்டு மன வருத்தம் அடையும்படி "நீரோ போற்று ஒழுக்கம் புரிந்தீர்" என்று அவள் கூறியபொழுது,

---

11 குறிஞ்சிக்கலி - செய்யுள். 9

" யான் அகத்தொளித்த நோயுந் துன்பமும்
நொடிவது போலும் என்வாயல் முறுவல் "

என்று கூறிய கூற்றில் நோய் என்பது உடம்பின் மெலிவு என்பதும் துன்பம் என்பது மனக்கவலை என்பதும் உரையாசிரியர்களால் விளக்கப்பட்டுள்ளன. எனவே, கணவனது பிரிவினுல் அவள் மன வருத்தம் உற்ருளல்லள் என்று கூறுதல் பொருந்தாது. மாருக, அவள் தன் மெய்வருத்தத்தையும் மனத்தளர்ச்சியையும் அரிதின் முயன்று மறைத்துவைத்துக் கொண்டிருந்தாள் என்றே கொள்ளுதல் வேண்டும். " வாடிய மேனி வருத்தங் கண்டு" என்ற இடத்திலும் அடியார்க்கு நல்லார், "மேனி வாட்டத்தையும் நெஞ்சு வருத்தத்தையுங் கண்டு" என்று எழுதியது இதனை வலியுறுத்தும்.

இவ்வாறு மனநோயினுல் வருந்திய கண்ணகி அதனை மறைத்துவைத்துக் கொள்ளுதலேயன்றிப் பிறர்மாட்டு எடுத்துக்கூறவுஞ் செய்திலள்; கணவனை எவ்வாறு தன்வயமாக்குவது என்பதைத் தெளிந்து செயலாற்றவுஞ் செயதிலள். இவளது நிலை நற்றிணையிற் பரணர் செய்யுள் ஒன்றனில் வரும் தலைவியின் நிலையொடு ஒத்ததாய் உள்ளது. அச்செய்யுளிற் பேசப்படும் தலைமகள்

" உன்பிரிவால் வருந்துதல் அல்லது
பிணித்தல் தேற்ருப் பெருந்தோட் செல்வத்து - இவள் "

எனப் பாராட்டப்பட்டுள்ளாள். "நின்னைத் தன்வயப்படுத்தலை அறியாத இவளைப் பிரிந்தது கொடிது" என்று தோழி வற்புறுத்திய இடம் இது. சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியின் நிலை இதனேடு ஒத்திருத்தலைக் கண்டறியலாம்.

பாலைக்கலியில் பொழில் ஒன்று அழகுபெறுதல் பேசப்படுகிறது. அப்பொழிலிற் சில பூங்கொம்புகள் உண்டு. அக்கொம்புகளில் உள்ள அரும்புகள் காலம் வரும்வரையில் மலர்தல் இல்லை எனக் கூற வருங் கவிஞர்

" ஆன்றவர் அடக்கம்போல்
அலர்ச் செல்லாச் சினையொடு கூடிய பொழில் "

எனக் கூறினர். இவ்விடத்திற் பூங்கொம்புகளுக்கு உவமையாகச் சொல்லப்பட்டது ஆன்றவர் அடக்கம். அறிவு நிரம்பி

யவர்கள் தம் காரியத்தை முடிப்பதற்குக் காலம் வருந்துணையுங் காத்திருப்பர். அவர் அடங்கியிருக்குமாறுபோலக் காலம் வரும்வரையில் மலர்தலிற் செல்லாத அரும்புகளையுடைய கொம்புகள் இருக்கும் என்றவாறு நச்சினுர்க்கினியர் உரை எழுதியது நினைவுகூரத்தக்கது. இங்கே கூறப்படும் ஆன்றவர் அடக்கம் ஒத்த அடக்கத்தை உடையவளாய்க் கண்ணகி இருந்தாள் என்பது தெளிவு. கோவலன் அவளைப் பிரிந்து மாதவியின் இல்லத்தில் தங்கியிருந்த நாட்களில் அவனைச் சினவாமல் விட்டுவிட்டு, மதுரைக்கு அவனுேடு வந்த வேளை யில் இனிதாகச் சமைத்து இட்ட பிற்பாடு அவன் மனமகிழ்ந்து தன் குற்றத்தை உணர்ந்து அதற்காக உண்மையில் வருந்தும் நேரங்கண்டு, அவ்வேளையில் அவனிடத்தில் "போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்" என்ருள். இச்சொற்களை முன்னர் எப்பொழு தாவது அவள் கூறியிருப்பாளேயானுல், கோவலனை அவள் அறவே இழந்திருக்கக் கூடும். அவ்வாறன்றிப் பொருத்த மான நேரம் பார்த்து அவனிடத்தில் இன்மொழி போன்ற கடுமொழிகளைக் கூறினுள் என்பதால் அவள் பெருமையடை கிருள். "உன் மெல்லடிகள் இந்தக் கல்நிரம்பிய காட்டு வழி யைக் கடக்க எப்படி இயன்றன?" என்றும், "என் பெற் ரேருக்கும் உனக்கும் பெருந்தீங்கு செய்தேனே!" என்றும் கோவலன் வருந்தி வருந்திச் செய்ததற்கிரங்கிக் கூறும் நேரம்பார்த்து, திருந்தும் உள்ளத்தினனுகிய அவனை நோக்கிப் "போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்ரு உள்ள வாழ்க் கையேன் ஆகலின் ஏற்றெழுந்தனன் யான்" என்று அவள் கூறியதிலிருந்து கலங்கிய உள்ளத்தோடு காலம் கருதியிருந்த பெருமையுடையவள் கண்ணகி என்பது தெரியவரும்.

கலித்தொகையில் (பாலைக்கலி - 15) தலைவி ஒருத்தி தலை வன் சென்ற காட்டின் கடுமையை உன்னி வருந்தினுளாயி னும், "தலைவன் செல்லுகிற வழியில் மழைபொழிக என மேகத்தை நாம் வேண்டுவதும் பொருந்துமோ?" என்றும், "வெப்பம் குறைந்திடுக எனக் கதிரவனைக் கேட்கவும் பொருந்துமோ?" என்றும், "வெம்மை தீர்ந்து வீசுக என வளிச்செல்வனை வேண்டுவதும் பொருந்துமோ?" என்றும் தோழியிடங் கேட்டாள் என அச்செய்யுள் கூறுகிறது. எனவே, கற்புடைய தலைமகள் கணவனையன்றிக் கடவுளை வாழ்த்துதல் பொருந்தாது என்று அவள் மதித்தாள் என் பது பெறப்படும். இந்நிலையில்தான் கண்ணகியும் இருந்தாள்

என்பது சிலப்பதிகாரத்தாற் புலனாகிறது. தேவந்திகை என்னுந் தோழி ஒருநாள் கண்ணகியை நோக்கி " முற்பிறப்பில் ஏதோ ஒரு நோன்பு பொய்த்தாய் போலும்! அதனால் இப்பொழுது உன் கணவன் உன்னிடம் அன்பு நிறைந்தவனாய் இல்லை. காவிரி கடலொடு கலக்குமிடத்திற் சோமகுண்டம், சூரிய குண்டம் என இரண்டு தடாகங்கள் உள்ளன; அவற்றில் மூழ்கிக் காமன் கோயிலிற் கைதொழுதால் கணவனோடு இன்புறலாம். நாம் ஒருநாள் அங்குச் சென்று நீராடுவோம்" என்று உரைத்தவளுக்கு மறுமொழியாகப் "பீடன்று" என்று ஒரே சொல்லிற் கண்ணகி விடையளித்தாள். கலித்தொகையினின்று எடுத்துக்காட்டப்பட்ட தலைமகள் "நாம் கடவுளை வாழ்த்துவதும் இயைவதோ" என்றாள். கண்ணகியும் காமவேள் கோட்டத்திற் கைதொழுதல் தன் பெருமைக்குப் பொருந்தாது என்றாள். இவ்வொப்புமைநயங் கண்டு உவத்தல் கூடும்.

குறிஞ்சிக் கலியில் தலைவி ஒருத்தியைத் தலைவன் பாராட்டிய விதம் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. அவளுடைய நெற்றியையும் முகத்தையும் கண்களையும் நடையையும் சொல்லினையும் நினைத்துத் தலைமகன் பாராட்டலுற்றவன் அவளது நுதல் நுண்ணிதின் தேய்ந்திருக்கிறது என்றாலும் பிறையன்று என்றான். அவளது முகம் மறுவற்றது என்றாலும் மதியம் அன்று என்றான். அவளது கண்கள் பூவின் தன்மை நெருங்கியன என்றாலும் சுனையல்ல என்றான். மெல்ல அழகுற அவள் நடப்பாளாயினும் மயில் அல்லள் என்றான். சொல்லச்சொல்லத் தளரும் இயல்பினள் என்றாலும் கிளியல்லள் என்றான். கண்ணகியின் நலத்தைக் கோவலன் பாராட்டிய விதம் இவ்வருணனையோடு ஒப்புநோக்கதக்கது.

" குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத் தாயினும்
உரிதின் நின்னொடு உடன்பிறப் புண்மையின்
பெரியோன் தருக திருநுதல் ஆகென "

என்று அவன் கூறிய இடத்தில், கண்ணகியின் நெற்றி சிவபெருமான் தலையில் அணிந்துள்ள பிறைபோன்றது என்று சொல்லக்கருதியவன் இவ்வாறு அழகுபெறக் கூறினான் என்பது அறியப்படும். அன்றியும், " திங்கள் முத்தரும்பவும் சிறுகிடை வருந்தவும் இங்கிவை அணிந்தவர் என்னுற்றனர்

கொல்'' என்று அவன் கூறியதாகக் கவிஞர் வரைந்தார். கண்ணகிக்கு அணிகலன்களை நிறையப் பூட்டியவர்கள் அவளுடைய திங்கள் போன்ற முகத்திலிருந்து முத்துப் போன்ற நீர்த்துளிகள் அரும்பும்படியும் அவளுடைய சிறிய இடை வருந்தும்படியும் அவற்றைப்பூட்டியதாற் பேயுற்றார்களோ என்று கேட்பது போன்று அமைந்துள்ளது இப்பகுதி. திங்கள் போன்ற முகத்தில் முத்துக்கள் போன்ற நீர்த்துளிகள் அரும்பின என்று கூறியவிடத்தில் எத்துணைக் கவிநயம் உள்ளது! இது கலித்தொகையில் வரும் மறுவற்ற முகமாயினும் மதியம் அன்று என்பதனோடு ஒப்புநோக்கத் தக்கது. கலித்தொகையிற் பேசிய தலைவன் அத்தலைவியினுடைய நடை மயில் ஒத்த நடை என்றான். கண்ணகியைப்பற்றிக் கூறிய கோவலன் அவள் சாயலுக்குத் தோற்ற மயில்கள் "தண்கான் அடைந்தன" என்றான். தளர்ந்து தளர்ந்து பேசும் இனிமையால் கலித்தொகைத் தலைவி கிளிபோன்றவள் என்று குறிப்பிடப்பட்டுள்ளாள். அதனோடு ஒப்புநோக்கி இன்புறத் தக்கது கண்ணகியின் சொற்களைப்பற்றிக் கோவலன் அமைத்த வருணனை.

> " அளிய தாமே சிறுபசுங் கிளியே
> குழலும் யாழும் அமிழ்துங் குழைத்தநின்
> மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகியும்
> மடநடை மாதுநின் மலர்க்கையின் நீங்காது
> உடனுறைவு மரீஇ ஒருவா ஆயின "

என அவன் பேசிய விதத்தில் கவித்துவம் ததும்புகிறது. அவளுடைய சொற்களின் இனிமை குழலோசையையும் யாழோசையையும் அமிழ்தின் சுவையையுங் குழைத்து இழைத்தாற் போல் இருந்தது என்று கூறுகிற அளவிலேயே தனியின்பம் காணுகிறோம். "குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைக் கிளவி" என்பதை அழகாக டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள் பல மேடைகளில் எடுத்துக்கூறி இன்புற்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள், நானும் அறிந்துளேன். கண்ணகியின் சாயலுக்குத் தோற்ற மயில் கானகத்துட் சென்று ஒளித்துக் கொண்டதாகவும் அவளது மென்னடைக்குத் தோற்ற அன்னம் மலர்ப் பொதும்பருட் சென்று ஒளித்துக் கொண்டதாகவும், மழலைக் கிளவிக்குத் தோற்ற பசுங்கிளிகளோ அவள் கையினின்று நீங்காமல் உடன் உறைகின்றன ஆதலால், அவை இரங்கத்தக்கவை. தோற்று ஓடாமல் வென்றவரோடு

நட்புப்பூண்டு உடனுறையும் இக்கிளிகளின் விளையாட்டு மனப்பான்மை போற்றத்தக்கது" என்றவாறு கூறியுள்ள இடத்திற் கண்ணகியின் சொல்லினிமையை எத்துணைக் கவிநயம்பட இளங்கோவடிகள் எடுத்து இயம்பியுள்ளார் என்பதை அறிந்து மகிழ்கிறோம்.

நற்றிணையில் மதுரை மருதனிளநாகனாரது பாட்டொன்றில் [12] "ஒரு நகில் அறுத்த திருமாவுண்ணி" என்னும் பெண்ணொருத்தி பேசப்படுகிறாள். வேங்கை மரத்தில் அமைந்த ஒரு பரணிலிருந்துகொண்டு எவனோ ஒருவன் விளைத்த கவலையினால் வருத்தமுற்ற பெண்ணொருத்தி ஒரு நகில் அறுத்துக் கொண்டாள் என்பதும், அவள் திருமாவுண்ணி எனக் கூறப்பட்டவள் என்பதும் இச் செய்யுளால் அறியவருகின்றன. நற்றிணையைப் பதிப்பித்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள் "திருமாவுண்ணி" என்பது கண்ணகி கதையைக் குறிக்கின்றது போலும்" என்று எழுதினர். இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு சிலர் "கண்ணகி திருமாவுண்ணியே வேறு அல்லள்" என்று முடிவுகட்டி ஆராய்ச்சி செய்துள்ளனர். நற்றிணையிற் பேசப்படும் திருமாவுண்ணி பற்றிய செய்திக்கும் கண்ணகி பற்றிய நிகழ்ச்சிகளுக்கும் நேர்ப்பொருத்தமில்லை. நற்றிணையில் வேங்கை மரத்தில் அமைந்த பரணில் எவனோ ஒருவன் தீமை விளைத்தான் என்பதும் அதுகாரணமாகத் திருமாவுண்ணி கவலை மீதூரப் பெற்றாள் என்பதும் கூறப்பட்டுள. கண்ணகி மதுரையை எரியூட்டியபின் சிலநாட் சென்று வேங்கைமர நிழலில் நின்றாள் எனச் சிலப்பதிகாரம் சொல்லுகின்றது. அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. ஏதிலாளன் செயலால் விளைந்த வருத்தத்தால் திருமாவுண்ணி ஒரு நகிலை அறுத்துக் கொண்டாள் என நற்றிணைச் செய்யுள் கூறுகிறது. கண்ணகியோ மதுரையை எரியுண்ணச் செய்ய நினைத்து இடநகிலைத் திருகி விட்டெறிந்தாள் என்று சிலப்பதிகாரம் சொல்லுகிறது. நற்றிணையில் வருபவள் பெயர் திருமாவுண்ணி. சிலப்பதிகாரத் தலைவி பெயர் கண்ணகி. பொருந்தும் தொடர்பின்மையின் இருவரும் ஒருவரே என்று கூறுதல் தகாது.

புறநானூற்றில் கழாத்தலையார் பாடிய பாட்டாக வரும் ஒன்றனுள் [13] சேரமான் பெருஞ்சேரலாதன் கரிகால் வள

---

12 நற்றிணை-செய்யுள் 216
13 புறம். 65

வனோடு போர் செய்து முதுகிற்புண்பட்ட காரணத்தால் நாண முற்று வடக்குநோக்கி இருந்தான் என்பதும், அவன் அவ் வாறு பட்டினியிருந்து மடிய எண்ணியமையால் அவனுடைய ஊர் விழாக்களையும் பொலிவினையும் இழந்ததென்பதும் அறி யப்படுகின்றன. இதனை

“ மண்முழா மறப்பப் பண்யாழ் மறப்ப
இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்பச்
சுரும்பார் தேறல் சுற்றம் மறப்ப
உழவர் ஓதை மறப்ப விழவும்
அகலு ளாங்கட் சீறூர் மறப்ப ”

என்ற வகையால் கழாத்தலையார் அறிவித்தார். முழா மண் பூசுவதை இழத்தலும் யாழ் பண்ணோடு இசைக்கப்படுவதை இழத்தலும் விழா எடுத்தலை ஊர் இழத்தலுமாகிய செய்திகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. இப்பாடற் பகுதியிற் கவிஞர் “மறப்ப” என்ற சொல்லை ஆறுமுறை பயன்படுத்தியுள் ளார். வந்த ஒருசொல்லே மீட்டும் மீட்டும் வந்தமையால் சில ருக்கு ஒருவகையின்பம் தோன்றுதல் கூடும். ஆயினும், வேறு சிலருக்கு வந்த ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்தமையால் சலிப்புணர்ச்சி தோன்றுதலும் இயல்பு. இளங்கோவடிகள் இதனையொத்த கருத்தைத் தெரிவிக்கவேண்டிய இடத்திற் சலிப்புணர்ச்சியை நீக்குதற்காக வெவ்வேறு சொற்களையும் முறைகளையும் பயன்படுத்தி எத்துணை அழகுறக் கவி இயற்றி யுள்ளார் என்பது அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் வருஞ் செயலற்ற கண்ணகிபற்றிய வருணனையால் விளங்கும்.

“ அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகஞ் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி ”

என்னும் இடத்தில், “மறப்ப” என்ற சொல்லினை இரண்டு முறை பயன்படுத்தி அக்கருத்துடைய “இழப்ப” என்னுஞ்

சொல்லை இரண்டு முறை பயன்படுத்தியிருக்கிறார் கவிஞர் என்பது அறியப்படும். இக்கருத்துடைய இரண்டு வேறு சொற்களாகிய "ஒழிக" "நீங்க" என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. கொங்கை முன்றிற் குங்குமம் மறப்ப எனக் கவிஞர் விரும்பினுல் எழுதியிருத்தல் இயலும். அவ்வாறு கூருமல் "கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்" என எழுதிக் கையாண்ட முறை மாற்றத்தால் கவி மேலும் அழகு பெறுகிறது. குங்குமம் எழுதாளாய், பிறிதணி மகிழாளாய், வடிந்துவீழ் காதினளாய், செயலற்ற நெஞ்சத்தினளாய்க் கண்ணகி இருந்தாள் என்று கவிஞர் காட்டியுள்ளார். இவ்வருணனையில் வரிசை நெகிழாமல் அடி, அல்குல், கொங்கை, கழுத்து அல்லது தோள், காது, முகம், கண், நுதல், கூந்தல் ஆகியவை பேசப்பட்டுள்ளன என்பதைக்காணுங்கால் உண்டாகும் இலக்கியவின்பம்பெரிது.

புறநானூற்றில் வரும் புலவர் ஒருவர் மணப்பறையும் பிணப்பறையும் ஒருங்கு கேட்குமாறும், கணவனேடு புணர்ந்தோர் மகிழக் கணவனைப் பிரிந்தோர் துயருறுமாறும் உலகத்தைப் படைத்தவன் பண்பிலாளன் என்ருர். மற்ருெருபுலவர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்விட்ட பிற்பாடு அவன் நடுகல்லைக் கண்டு அவன் பெருமையெல்லாங் கூறி, "அத்தக் கோனைக் கூற்றம் கொண்டதாகலின் சுற்றத்தாரோடு சென்று அக்கூற்றுவனை வைவோமாக, வாய்மொழிப் புலவீர் வாரீர்" என்று பாடியதாக அச்செய்யுள் உள்ளது. இதனேடு ஒப்புநோக்கத் தக்கது கண்ணகி அறக்கடவுளைப் பழித்த செய்தி. அவள்

> "மறனெடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
> அறனெனும் மடவோய்யான் அவலங்கொண்ட ழிவலோ!"

என்று கூறியதாகச் சிலப்பதிகாரத் துன்பமாலைப் பகுதி காட்டுகிறது. பாண்டிய மன்னன் தவறிழைக்கும்படி விட்டு விட்ட அறக்கடவுளை "மடவோய்" எனக் கண்ணகி வைதே விட்டாள். அதனுல், வாழ்த்துக் காதையிற் கவிஞர்

> "அலம்வந்த மதிமுகத்திற் சில செங்கயல் நீருமிழப்
> பொடியாடிய கருமுகிறன் புறம்புதைப்ப அறம்பழித்து"

என்றவாறு கூறினர். பக்குடுக்கை நன்கணியார் "படைத்தவன் பண்பிலாளன்" என்ருர். பொத்தியார் "கூற்றுவனை

வைவோம் வாரீர்" என்றார். கண்ணகி அறக்கடவுளை "மடவோய்" என வைதேவிட்டாள்.

புறநானூற்றில் வரும் பாரிமகளிருடைய கையறுநிலைச் செய்யுள் உருக்கம் நிரம்பியது :—

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேமெங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே"

இச்செய்யுளைப் பாடிய பாரியின் மகளிர் இருவரும் தம்முடைய தந்தையைச் சென்ற திங்களிற் பெற்றிருந்ததனல் அடைந்த பெருமையையும் ஏமாப்பினையும் முதலிற் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய குன்றம் தம்வயம் இருந்தது பற்றி அடுத்த அளவில்தான் அவர்களுக்கு மகிழ்ச்சி இருந்தது. தந்தையையும் குன்றத்தினையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது குன்றத்தை இழந்து தந்தையைப் பெற்றிருந்தால்கூடத் துயரம் உற்றிருக்க மாட்டார்கள், அவர்கள் பேசுகிற அந்த நிலவு நேரத்தில் "குன்றம் போயிற்றே எம் தந்தையும் இல்லையே" என்றவாறு கலங்கினர் என இப்பாடலினல் அறிகிறோம். எங்கள் நாடு போயிற்று, எங்கள் தந்தையாவது இருந்திருக்கக்கூடாதா எனக்கருதி அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பது "குன்றும் கொண்டார்" என முதலில் வைத்து "எம் தந்தையும் இலமே" எனப் பின்னர் வைத்துப் பேசினமையால் அறியப்படும். இரக்கவுணர்ச்சியைத் தூண்டிவிடத்தக்க உலகச் செய்யுட்களில் இப்புறநானூற்றுச் செய்யுளுக்குச் சிறந்ததோர் இடமுண்டு. அவ்வாறே, இரக்கவுணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடியனவாய்ச் சில பகுதிகள் சிலப்பதிகாரத்திற் காணப்படுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனை எதிர்நோக்கி, "வாழ்தல் வேண்டி நின்னகர்ப் புகுந்த என்கணவன் உன்னாற் கொல்லப்பட்டனனே!" எனக்கூறி, "வாழ்வு விரும்பினவன் சாவு பெற்றான்" எனத் தெரிவிக்குமிடத்திற் பெரியதோர் இரக்கம் எழுதல் இயல்பு. கோவலன் வெட்டுண்டு கிடந்தவனைக் காணவந்த கண்ணகியைத் தான் காணாய்க் கோவலன் கிடந்த நிலையில் அவள் பாடிய பாட்டு உருக்கத்தின் உயர்ந்த எல்லைக்குச் செல்லுகிறது.

" வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேற்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன்றன்னைக் காணாக் கடுந்துயரம் "

என்று அவள் கூறிய செய்யுளிலிருந்து காலை நேரத்திற் கணவனைத் தழுவித் தன் கூந்தலில் அவனால் மாலைசூட்டப் பட்டாள் என்பதும், மாலையில் அவன் குருதி சோர்ந்து செய லற்ற நிலையிற் கிடப்பதைக் கண்டாள் என்பதும் அறியப் படுகின்றன. காலை நேரத்தில் மகிழ்ச்சியும் மாலை நேரத்திற் கடுந்துயரமும் அவள் அடைந்தாள் என்பதை இப்பாட்டு வெளிப்படுத்தியுள்ளது. அவன் அவளைக் கண்டால்கூட ஒரு வாறு தணிவாள்; ஆனால் காணவில்லையே என்றவாறு பொருள்படும்படி "அவன் தன்னைக் காணாக் கடுந்துயரங் கண்டாள்" என்ற பகுதி அமைந்திருக்கிறது. கவிஞர்

" செம்பொற் கொடியனையாள் கண்டாளைத் தான்காணான் "

எனக்கூறி உருகுகிறார். கோவலனோ கண்ணகியோடு முதல்நாட் கூட்டத்திற்குப் பிறகு அவள் கூந்தலில் சில மலர்களை அணிவியாமற் பெரிய மாலையை அணிவித்த மடந்தையர் பேயுற்றனரோ என்று பேசினான். இன்று காலையிலோ அவனே அவளது கூந்தலில் மாலையை எடுத்துச் சூட்டினான்! அந்தோ பரிதாபம்! அக்காலைவாய் இன்பம் மாலையில் துன்பமாயிற்றே எனக் கதறுகிறார் கவிஞர் என் பது தெளிவு. கட்டுரைக் காதையிலும் கண்ணகி,

" கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு "

எனக் கூறிச்செல்லுமிடத்தில் வரும் முரண்தொடை அமைப் பினால் விளைகின்ற உருக்கம் உன்னத்தக்கது.

திருக்குறளுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடையே பல இடங்களில் ஒற்றுமைகள் உள்ளன. அவற்றைப்பற்றித் தனியே கட்டுரை எழுதியுள்ளேன் ஆதலின் இன்று அவ் வொற்றுமைகளைப்பற்றி எடுத்துக் கூறிக்கொண்டிருக்க மாட்டேன்.

" பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் "

என்ற திருக்குறளின் சொல்லும் பொருளும் சிலப்பதிகாரத் தில்,

" முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண் "

என்றவாறு அமைந்துள என்பதைப் பலர் அறிவர் என்னும் அளவில் அமைவேன்.

கலித்தொகையில் பெண்ணொருத்தியைப் பார்த்துப்பாராட்ட நினைத்த தலைவன் ஒருவன் " நல்லார் உறுப்பெலாங் கொண்டியற்றியாள் கொல் " எனக் கூறினன். இலக்கணம் வாய்ந்த நல்ல மகளிருடைய நல்ல நல்ல உறுப்புக்களைத் தனித்தனி எடுத்து உருவாக்கப்பட்ட பெண்மகளோ இவள் எனப் பேசினன் என்பது கருத்து. சிலருக்குக் கண்ணும் சிலருக்கு மூக்கும் சிலருக்குக் கையும் அழகாக இருப்பதுண்டு. அத்தகைய அழகிய உறுப்புக்களையெல்லாம் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட பெண்ணே இவள் என்ற பேச்சு கலித்தொகைச் செய்யுளில் வந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில்,

" கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர் "

என்ற இடத்தில் கயல்மீன் போன்ற கண்களையும் வில் போன்ற புருவத்தையும் மேகம் போன்ற கூந்தலையும் ஒன்று சேர்த்துக் காமவேள் இயற்றும் செயற்றிறமும் சேர்த்து உருவாக்கி முடித்துவிட்ட திங்களோ இவள் முகம் என்று பெண்ணொருத்தியைப்பற்றி ஒருவன் பேசியதாகக் காண்கிறோம்.

" ஓவிய மாக எழுதிய பின்னை யொருமுதல்வன்
ஆவி புகுத்தி விடுத்தன னேவன் றழகையெல்லாந்
தாவி மனத்தாற் றிரட்டின னேவலன் றன்வலிவும்
பூவை யுருவும் நிலையிற்பொன் னுளோர் புதுமையன்றே "

இப்பாடலில், ஓவியமாக இப்பெண்ணை எழுதிய பிற்பாடு முதல்வன் உயிரைச் சேர்த்தனனே, அழகையெல்லாம் மனத்தால் திரட்டினனே என்றவாறு சகுந்தலையைப்பற்றி துஷ்யந்தன் கூறியதாகக் காளிதாசர் எழுதியுள்ளார்[14]. பிரான்சிஸ் தாம்புசன் (Francis Thompson) என்னும் கவிஞர் ஆங்கிலத்தில் இதைப் போன்று அழகாக வயோலா (Viola) என்னும் பெண் உருவாக்கப்பட்டமைபற்றி அழகுறத் தீட்டியுள்ளார்.

" All things accomplished, saith the Father of Heaven !"

---

14 சாகுந்தல நாடகம் — மறைமலையடிகள் மொழி பெயர்ப்பு.

"Bear her down, and bearing, sing
Bear her down on spyless wing
Bear her down, and bearing, sing,
With a sound of Viola."

* * * *

"Baby smiled, mother wailed,
Earthward while the sweetling sailed;
Mother smiled, Baby wailed,
When to Earth came Viola"

என்ற பகுதியை நோக்குக.

மணிமேகலை சிலப்பதிகார காலத்திற்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு கழித்துத் தோன்றிய காப்பியம் என்பது தமிழ்ப் பெரும்புலவர் கணியர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களது கருத்து.

"மணிமேகலைமே லுரைப் பொருண்முற்றிய
சிலப்பதிகார முற்றும்"

என்று வரும் நூற்கட்டுரைப் பகுதியிலிருந்து மணிமேகலை சிலப்பதிகாரத்திற்கு முன்னர் இயற்றப்பட்ட நூல் போன்றதோர் குறிப்புண்டு. அம்மணிமேகலையில் வஞ்சிமாநகர் புக்க காதையில் கண்ணகி கூற்றாக வருவது சிலப்பதிகாரச் செய்தியினின்று மாறுபடுகிறது. சிலப்பதிகார வழியாக நோக்கினால் கண்ணகி கோவலனோடு விண்ணுலகு புக்குத் தெய்வமகள் ஆயினள் என்றாகும். மணிமேகலையிலோ கண்ணகி மணிமேகலையை நோக்கிக் கூறிய கூற்றாக வருவதொன்றை வைத்துப் பார்த்தால் சீற்றங்கொண்டு மதுரை நகரை அழித்த காரணத்தால் கண்ணகிக்கு மீட்டும் பிறப்புண்டு என்னும் கருத்து வெளியாகிறது.

"சீற்றங் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
மேற்செய்நல் வினையின் விண்ணவர்ச் சென்றேம்
அவ்வினை யிறுதியின் அடுசினப் பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது
உம்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்பு
யாங்கணும் இருவினை உய்த்துமைப் போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம்"

என்று கண்ணகி கூறியதாக வரும் பகுதி நோக்கத்தக்கது. சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் உள்ள சில ஒற்றுமை வேற்றுமைகளை மேலெழுந்தவாரியாகக் குறித்துச் செல்வேனாக:—

# "சிலப்பதிகாரமும் மணிமேகலையும்"

## சிலம்பு

1. "உனக்குச் சொல்லவும் வேண்டுமோ"....மாடலன் செங்குட்டுவனை நோக்கி.
2. கண்ணகி இறந்த கோவலனை உயிருடன் கண்டமை.
3. மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்கு உரைத்தது.
4. கோவலன் கணிகையர்பால் கெட்டமை.
5. பாண்டியன் மனைவியோடு கூடச் செல்வோான் முறைபிறழ்ந்து உரைத்தது.
6. படுபொருள் வவ்விய பார்ப்பான் என ஒருவனைச் சிறையில் இட்டது.
7. என்னைப்போல ஈரேழ்நாள் எல்லை நின் மனையாள் துயர் உறுக என நீலி பரதனுக்குச் சாபமிட்டது.
8. பத்தினி கண்ணகியின் திறம்.
9. பார்ப்பான் ஒருவனை யானை துன்புறுத்த அதனின்று கோவலன் காத்தது.
10. மாடலன் செங்குட்டுவனுக்குச் செல்வ நிலையாமையைக் கூறுவது.

## மணிமேகலை

1. "ஆடவர்க்குப்பெண்டிர் கூறவும் வேண்டுமோ"......மணிமேகலையம் சுதமதியும் உதயகுமரனை நோக்கி.
2. ஆதிரை தீயிடப்பட்டும் இறவாமை.
3. சம்பாபதித் தெய்வம் மணிமேகலைக்கு உரைத்தது.
4. ஆதிரையின் கணவன் சாதுவன் விலைமகளிர்பால் கெட்டமை.
5. மாவண் கிள்ளி கூடச் செல்வோன் மணிமேகலையை வருக என அழைத்து அவள் கருத்துப்படி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கியது.
6. ஆவினைத் திருடிய கள்வன் என ஆபுத்திரனை அலைத்துத் துரத்திக் கடிஞையில் கல்லிட்டதும், மணிமேகலையைச் சிறைப்படுத்தியதும்.
7. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நாவற்பழம் சாப்பிட்ட விருச்சிகன் பன்னிரண்டு ஆண்டுகழித்துக் காயசண்டிகை தீப்பசி தீர்க்கப் பெறுவாள் என்றது.
8. பத்தினி ஆதிரையின் திறம்.
9. சுதமதியின் தந்தையை ஒரு காளை முட்டிக் குடலை அகற்றித் தள்ளிவிடப் பௌத்தமுனி காத்தது.
10. மணிமேகலை உதயகுமரனுக்கு நிலையாமை கூறுவது.

இவைபோன்றவை பிற கருதத்தக்கன.

# III. "சிலப்பதிகாரத்திற்குப் பிந்திய தமிழிலக்கியம்"

(19—2—1964)

சிலப்பதிகாரத்தில் "கடவுளைக் காணாத கண் என்ன கண்ணே! கண்ணிமைத்துக் காண்பார்தங் கண் என்ன கண்ணே!" என ஆய்ச்சியர்கள் கூடிக் குரவைக் கூத்தின் பொழுது பாடினார்கள் என இளங்கோவடிகள் "ஆய்ச்சியர் குரவை" என்னுங் காதையில் எழுதியுள்ளார்:—

"பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே"

திருமாலைக் காணாதவர்களுடைய கண்கள் பீலிக் கண்கள்; மரக் கண்கள் என்னுங் குறிப்புப்பட அவர் இவ்விடத்திற் கூறியுள்ளார். அவ்வாறே, "பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நா என்ன நா?" எனப் பாடியவிடத்தில் அந்த நா கலப்பை நா, மணிநா என்னுங் குறிப்புப்படப் பாடியுள்ளார். "திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே?" எனப் பாடியபொழுது அச்செவிகள் மரச்செவி, மட்செவி, கற்செவி, என்னுங் குறிப்புவைத்துப் பாடினர். அவ்வாறே, திருஞானசம்பந்தர்,

'ஆமாத்தூ ரம்மானைக் —
காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே'
'ஆமாத்தூ ரம்மானைக்
கூறாத நாவெல்லாங் கூறாத நாக்களே'
'ஆமாத்தூ ரம்மானைக்
கேளாச் செவியெல்லாங் கேளாச் செவிகளே'
'ஆமாத்தூர்
நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே'

என்றவாறு பாடினமை அறியப்படும்.

கவுந்தியடிகள் அருகக் கடவுளையன்றி வேறு எக்கடவுளை யுந் தொழும் விருப்பினரல்லர் என்பது நாடுகாண் காதையால் நன்கு விளங்கும். சாரணர்தலைவரைக் கண்ட கவுந்தியடிகள் அருகன் நாமங்களைக் கேட்டுக் கைகளைத் தலைமேற்கொண்டு வணங்கிக் கூறிய கூற்றில் அருகக் கடவுளது திருமொழிக்கு அல்லாமல் வேறு எம்மொழிக்கும் தம் செவிகள் திறக்கா என்றும், அவன் ஆயிரத்தெட்டுப் பெயர்களையன்றி வேறு எப்பெயரையும் தம் நா நவிலாது என்றும், தமது கையகத்து வந்துநின்று காண்க காண்க எனப் பிற தெய்வங்கள் கதறி னாலும் தம் கண்கள் காணமாட்டா என்றும், அவரது திருமெய் எதிரே அல்லாமல் வேறு எவர் முன்னாலும் தம் உடல் வணங் காது என்றும் அவர் கூறிய செய்தி

"காவுந்திகை தன்கை தலைமேற் கொண்டு,
ஒருமூன்று அவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லது என்செவியகந் திறவா ;
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாமம் அல்லது நவிலாது என்நா ;
ஐவரை வென்றோன் அடியிணை அல்லது
கைவரைக் காணினும் காணா என்கண் ;
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது"

என்னும் நாடுகாண் காதைப் பகுதியால்[15] அறியப்படும். திருநாவுக்கரசர்,

"கூத்தாநின் குரையார் கழலே யலது
ஏத்தா நாவெனக் கெந்தை பிரானிரே"

எனக் கூறினாரென்பது இதனோடு ஒப்புநோக்கத்தக்கது. திருவாசகத்திலும்,

'பழுதிறொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே"

என வந்திருப்பதில், "பிறந்தாள் தொழாமைப் பேரறம்"

15 அடிகள் 193-201

மாணிக்கவாசகரால் எவ்வாறு போற்றப்பட்டுள்ளது என்பது அறியவரும்.

கணவன் உழுவலன்போடு பழகும் நாளெல்லாம் அவனோடு மிக்க கேண்மைபூண்டு அவன் விருப்பப்படி நடந்து வந்த கண்ணகி அவன் மாதவியோடு இணங்கி நடத்திவந்த வாழ்க்கையைப்பற்றி முதலில் வெறுத்தொதுக்காமல் இருந்தாளாயினும் வேளை வந்தபொழுது அவள் வாளா இருந்திலள். செய்த தீங்குகளுக்கு இரங்கி அவன் மனம் உளைந்து வருத்தத்தைத் தெரிவிக்கும் எல்லையில் கண்ணகி "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்ற சுடுசொல்லைக் கூறத் தயங்கினாளல்லள். அவ்வாறே, பெரிய புராணத்தில் வரும் தலைமகளிர் சிலர் உரிமையின்கண் வேட்கையுடையவராய் இருந்துள்ளார் என்பது தெரியவருகிறது. காரைக்காலம்மையார் கணவன் பரமதத்தன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டான் என்றறிந்த பிற்பாடு கணவனைப்பற்றிப் பேசும் கூற்றில் இகழ்ச்சி தோன்றக் கணவனை 'இவன்' எனக் கூறியது போல் வைத்துச் சேக்கிழார் அமைத்த திறம் நோக்கத்தக்கது.

'ஈங்கிவன் குறித்த கொள்கை இது-இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழிந்து
நின்தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும்"

என்று புனிதவதியார் பேசியதாகப் பெரியபுராணம் கூறும்[16].

இயற்பகை நாயனர் உலகவியலைப் பகைத்து நடக்கும் இயல்பினராதலின் அப்பெயர் பெற்றார். தம் மனைவியைப் பிறருக்குத் தாரேன் என்பது உலகியல். அதனைக் கடந்த இயற்பகை நாயனர் சோதனைக்கிணங்கித் தம் மனைவியை மெய்த்தவருக்குக் (கடவுளுக்கு) கொடுக்க இணங்கினர். கடவுள் சில வேளைகளில் நாம் அரிய பெரிய பொருள்களென்று மதிப்பனவற்றை விட்டுக்கொடுக்க ஒருங்குகிறோமா எனப் பார்ப்பார் போலும்! "உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்" என்று கூறும் பக்தர்கள் கூறுவன அனைத்தும் உண்மைதானா எனக் கடவுள் சில வேளைகளிற் சோதிக்க விரும்புவார் போலும்! அதனல் அன்றோ தம்மால் மிகவுங் காதலிக்கப்பட்ட மாசறு

16 காரைக்காலம்மையார் புராணம் செய். 49

மனைவியை இயற்பகையார் பிரிவதற்கு ஒருங்குகிறாரா எனக் கண்டறிய வேண்டிச் சோதனை நடந்தது! எவ்வாறாயினும், இயற்பகையார் தம் மனைவியைத் தவமுடையார்க்கு அளிக்க இணங்கிவிட்டார். அச்செய்தியை மனைவியிடஞ் சொன்னதும் அவர் கலக்கமுற்றார் என்பதும், பிறகு மனந்துணிந்து பேசினாரென்பதும் சேக்கிழாரால் அழகாகக் கூறப்பட்டுள்ளன. "மதுமலர்க்குழல் மனைவியார் கலங்கி மனந்துணிந்தவுடன் மற்றிது மொழிவார்" என்பது அவர் வாக்கு. மனைவிக்கு இருக்க வேண்டிய கலக்கம் அந்நங்கையார் எய்தாமலில்லை. எனினும், ஒருவாறு தெளிவுற்று அவர் பேசலுற்றதாகக் கூறப்படுஞ் சொல்லை நோக்குவோமாக :—

"இன்றுநீரெனக் கருள்செய்த திதுவேல் என்னு
யிர்க்கொரு நாத! நீர்உரைத்த
தொன்றை நான்செயும் அத்தனை யல்லால் உரிமை
வேறுளதோ எனக்கென்று
தன்தனிப்பெருங் கணவரை வணங்கத் தாழ்ந்து
தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து திகைத்து
நின்றனள் திருவினும் பெரியாள்"

என்று வரும் பெரியபுராணச் செய்யுளில், "பல்லாண்டுகளாக நுமக்குக் குற்றேவல் செய்துவந்த எனக்குத் தாங்கள் திருவருள் செய்தது இதுவானால், இவ்வுரைத்ததொன்றை நான் செய்தலையன்றி உரிமை வேறு என்ன இருக்கிறது!" என்று தம் கணவரைக் கேட்டார் இயற்பகை மனைவியாரென அறிகிறோம். தாங்கள் திருவுள்ளங்கொண்டு அருள் செய்தது இதுவானால் என்று கேட்குங்கால், கணவனுடைய முகத்திற் சிவப்புக்குறி தோன்றிற்றுப் போலும்! அதனைத் தடுக்க "என்னுயிர்க்கு ஒரு நாதனே" என உடன் அவ்வம்மையார் பேசியது நினைக்கத்தக்கது. இயற்பகை கூறிய வாக்கினைத் தன் வாயினால் திரும்பக் கூறக்கூடத் தான் விரும்பவில்லை என்ற குறிப்பினை "நீர் உரைத்ததொன்றை நான் செய்யும் அத்தனை அல்லால்" என்றவிடத்திற் குறிப்பாக விளக்கிக்காட்டினார் அவ்வம்மையார். "அதனை அல்லால் உரிமை வேறுளதோ" என அவர் கேட்டவிடத்தில் உரிமை வேறு உள்ளதாயின் அதுபற்றி என்போன்றோர் பேசுதல் இயலும் என்ற குறிப்போடு அவ்வம்மையார் கூறியதாகச் சேக்கிழார் அமைத்த

இலக்கியத்திறம் உற்று நோக்கத்தக்கது. கணவன் கூறியபடி மாதவர் பக்கல் சென்றுநின்ற அவ்வம்மையார் "திகைப்புடன் நின்ருர்" என்று சேக்கிழார் கூறிய வகையினுலே அவ்வம் மையாருடைய மெய்ப்பாடுகள் உணர்த்தப்பட்டுள்ளன.

இதுதான் தமிழ்நாட்டுப் பெண்டிர்களுடைய அழியாப் பண்பு. புறநானூற்றில் வரும் தாய் ஒருத்தி கணவனையிழந்த வள் தன் சிறுபுதல்வனைப் போர்க்களத்திற்குச் செல்லுக என விடுக்கின்ருள்.

> "செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
> * * * * *
> ஒருமகன் அல்லது இல்லோள்
> செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"

எனக் கூறும் புறநானூற்றுச் செய்யுளில் அத்தாயினுடைய வீரமும் பரிவும் ஒருங்குசேர்த்துப் படம்பிடித்துக் காட்டப்பட் டுள்ளன. தன் குடும்பம் நாட்டிற்குப் பணி செய்தலில் தாழ்த் தல்கூடாது என்பதால் வந்த விருப்பம் ஒரு பக்கம்; ஒரே மகனைப் போர்க்களத்திற்கு அனுப்ப வேண்டியிருக்கிறதே என்ற நினைப்பினுல் வந்த திகைப்பு ஒருபக்கம். இவ்விரண்டி னையுஞ் சேர்த்து "விருப்புற்று மயங்கி" என்ற வகையில் அவரது நிலையினைப் புலப்படுத்திய கவிஞர் திறம் எண்ணத் தக்கது. அவ்வாறே, கண்ணகியும் தனக்குக்கொடுமை செய் யப்பட்ட ஊராகிய மதுரையைத் தீக்கொளுவ எண்ணிவிட்டா ளாயினும், மதுரையை எரிக்கிறேனே என்று ஒருபக்கம் உளைந்த மனத்தினளென்பதைப் புலப்படுத்தவே கவிஞர்

> "கோநகர் சீறினேன் குற்றமிலேன் யானென்
> றிடமுலை கையாற் றிருகி மதுரை
> வலமுறை மும்முறை வாரா அலமந்து"

என்று கூறினுர். ''அலமந்து'' என்ற சொல்லினுல் கண்ணகி பேயல்லள் பெண்மணியே என்பதனை நிறுவியராகிவிட்டார்.

பெரியபுராணத்தில் வெண்காட்டு நங்கையின் செய்தியாக வருவதொன்றும் இவற்றை ஒருபுடை ஒத்தது. அவர் கணவ னுர் சிறுத்தொண்டர் மாதவர் ஒருவர் அமுது செய்வதற்கு எனக் கேட்ட பிள்ளைக்கறியைச் சமைத்துத்தர இணங்கி விட்டார். குடிக்கு ஒரே பிள்ளையாக இருக்கவேண்டும் அப் பிள்ளை; உறுப்பில் குறைபாடு இல்லாதிருத்தல் வேண்டும்

அப்பிள்ளை; அப்பிள்ளையை அரிந்து சமைத்துத்தரின் உண் போம் என்பதாக மாதவர் கூறிவிட்டார். தன்பால் உள்ள மைந்தன் குடிக்கு ஒரே பிள்ளையாக இருக்கிறுன் என்றும், ஐந்து வயதுக்கு உட்பட்டவனுக இருக்கிறுன் என்றும், ஆத லால் அவனைக் கறிசமைத்து அடியவர்க்குத் தந்துவிடலாம் என்றும் உடனே கருதிவிட்டார் சிறுத்தொண்டர். இஃது ஆண் எண்ணம். அடியவர் விருப்பத்தை மனைவியாருக்கு அவர் தெரிவித்தவுடன் "இத்தகைய பிள்ளைக்கறி சமைத்துத் தருவதில் தடையில்லை. ஆனுல் ஒரு குடிக்கு ஒருவனுக வரும் பிள்ளையைப் பெறுமாறு எவ்வாறு?" என்று கணவனைக் கேட்டார் நங்கையார். இவ்விலக்கணங்கள் பொருந்திய பிள்ளை தன்மகன் என்ற எண்ணமே அவருக்கு வந்திலது. இது பெண் எண்ணம். எனினும், கணவன் தந்த வாக்கினை நிறைவேற்றுதற்கு உட்பட்டவராகிக் கணவன் செய்யவிருக் கும் செயலில் துணைநிற்கக் கருதுகிறுர் அவர். கணவனுர் கூறுகிறுர் "தாழாமே எனை இங்குய்ய நீபயந்தான் தன்னை அழைப்போம் யாம்" என்று. மனைவியார் கூறுகிறுர் "நம் மைக் காக்க வருமணியைச் சென்று பள்ளியினிற் கொண்டு வாரும்" என்று. சிறுத்தொண்டர், "பள்ளிக்கூடம் சென் றிருக்குங் குழந்தையை நாம் போய் அழைத்து வருவோம் கறியாக்குதற்கு" என்று கூறுகிறுர். அவர் மனைவியோ ஒரு புடை ஒப்புக்கொண்டு ஒரு பக்கம் மனம் ஒவ்வாமல் "நீர் பள்ளிக்குப் போய்க் குழந்தையைக் கொண்டுவாரும்" என்கி றுர். இதிலிருந்து தமிழ்நாட்டு மகளிர் பொதுவாக அரக்க ருள்ளம் படைத்தவரல்லர் என்பதும், வீரமுடையவராயினும் ஈர நெஞ்சத்தினர் என்பதும் வெளியாகும்.

"குஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை
 அரைநாண் துகள்நீக்கி
மஞ்சள் அழிந்த அதற்கிரங்கி மையுங்
 கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி யஞ்சும் மெல்லடியார் பரிந்து
 திருமஞ் சனமாட்டி
எஞ்சல் இல்லாக் கோலஞ்செய் தெடுத்துக்
 கணவர் கைக்கொடுத்தார்"

என வருஞ் செய்யுளிற் சேக்கிழார் உருகுகின்றுர் என்பது தெளிவு. சிறிது நேரத்திற் கறியாக்கப்பட இருக்கும் தன்

அன்புக் கனியைக் கடைசிமுறையாகக் குளிப்பாட்டி அழகு படுத்திக் கணவன் கையிற் கொடுத்தார் அவ்வம்மையார் என்பதைத் தெரிவிக்கும் இச்செய்யுளில் வந்துள்ள ஒவ்வொரு சொல்லும் இரக்கத்தினை எழுப்புகின்றது என்பது அறியப்படும். அடியவர் திருவமுது செய்யக்கூடிய குழந்தையினிடத்தில் அழுக்கு இருத்தல்கூடாது என்பதற்காக உடம்பிலுள்ள அழுக்குகளைப் போக்கி அரைநாணிலுள்ள தூசிகளையெல்லாம் நீக்கினர் அவ்வம்மையார் என்று கூறுவது ஒரு பக்கம். குழந்தையின் தலைமுடியை ஒருமுறைக்கு நான்குமுறை நீவிக் கொண்டு அவர் இருந்தாரென்பது "குஞ்சி திருந்தி" என்றதனற் புலப்படும். குழந்தையின் கண்ணில் மீண்டும் மையிட்டு அழிந்துபோன மஞ்சளுக்குப்பதில் வேறு மஞ்சளிட்டு அழுக்குகளையெல்லாம் போக்கித் திருமஞ்சனம் ஆட்டினர் அவர் என்று கூறுமிடத்து அவருடைய திகைப்பினையும் பதைப்பினையும் கவிஞர் குறிப்பாகக் காட்டுவார்போலப் "பஞ்சி அஞ்சும் மெல்லடியார்" எனக்கூறியுள்ளார். செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுதல்கூடப் பொறுக்கமுடியாத அடிகளையுடைய அவ்வம்மையார் என்று இதற்கு நேரே பொருள் செய்துகொண்டிருப்பதிற் பயனில்லை. அவரது அச்சமும் தயக்கமும் மெல்லியலும் பஞ்சி அஞ்சும் மெல்லடிகள் என்ற சொற்களிற் குறிப்புவகையால் அறியவைக்கப்பட்டிருக்கின்றன என்று கொள்ளுதல் பொருந்தும். கடைசியாகக் குழந்தைக்குச் செய்யப்படும் அருமைச் செயல்களை இயற்றிக்கொண்டிருக்கும் வகையினல் வெண்காட்டு நங்கையார் குழந்தையைத் தருவதில் எத்துணை அளவு நேரங் கடத்த முடியுமோ அத்துணை அளவு நேரம் கடத்தப் பார்க்கிறார் என்பதுதான் பாட்டின் திரண்ட முடிவு. குழந்தையை உயிருடன் எத்துணை நேரம் வைத்திருந்து மகிழலாமோ அத்துணைநேரம் வைத்திருந்து மகிழ விழையும் தாயுள்ளம் இங்கே தொனிக்கிறது. குழந்தையைக் கறியாக்கக் கணவன்பொருட்டு ஒப்புக்கொண்டுவிட்ட பெண் மணி இன்னொரு பக்கத்திற் பெண்ணுள்ளத்தால் எந்த அளவு கலக்கமுறுகிறாள் என்பதைக் கவிஞர் காட்டியிருக்கும் அழகு இலக்கியவுலகில் உயரியதாக வைத்துப் போற்றத்தக்கது.

பாஞ்சாலி சபதத்தை இயற்றிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் திரௌபதியின் கூற்றாக அமைத்தவற்றில் பெண்களுக்கு உரிமையின்கண் உள்ள வேட்கை நன்றாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும்

நிகராக வாழவேண்டுமென்று விரும்பியவர் பாரதியார். மாதர்களை இழிவுசெய்யும் மடமைகளைக் கொளுத்தவேண்டுமென்று கருதிய அவர், மகாபாரதத்தினின்று சிறிது விலகித் திரௌபதியின் வாக்கில் புதுமைப் பெண்ணின் குரலை ஒலிக்க வைத்துள்ளார். சபைக்கு அழைத்துவரும்படி கூறினார்களெனத் தெரிவித்த தேர்ப்பாகனிடத்தில், "நாயகர்கள் தம்மைத் தோற்ற பிற்பாடு என்னைக் கொடுக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை" என்று கூறியதோடன்றியும், "கௌரவவேந்தர் சபையில் அறங்கண்டவர் யாவரும் இல்லையோ" என்றும், "அங்கே சாத்திரம் செத்துக்கிடந்ததோ" என்றும் வெகுண்டுரைத்தாள். பிறகு சபைமுன் சென்ற பாஞ்சாலிக்கு வீட்டுமர் நீதியும் வழக்கும் எடுத்துக் கூறியதாக வரும் இடம் நோக்கத்தக்கது.

"சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்.
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி: தொழில் வலியால்
மாதரசே, நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனி லுன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய், கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படிநீ சொல்லுவது
நீதமெனக் கூடும் ; நெடுங்காலச் செய்தியது.
ஆணொடு பெண் முற்றும் நிகரெனவே யந்நாளில்
பேணி வந்தார், பின்னாளிலஃது பெயர்ந்துபோய்,
இப்பொழுதை நூல்களினை யெண்ணுங்கால், ஆடவருக்கு
ஒப்பில்லை மாதர் ; ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம், தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்குமுறைமை யன்றிவே றில்லை.
தன்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு.
செல்லு நெறியறியார் செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லு நடுங்கும், விலங்குகளும் கண்பதைக்கும்.
செய்கை யநீதியென்று தேர்ந்தாலுஞ் சாத்திரந்தான்
வைகு நெறியும் வழக்கமும்நீ கேட்பதனால்
ஆங்கவையு நின்சார்பி லாகாவகை யுரைத்தேன்"

என்று கூறிய வீட்டுமாச்சாரியார் எதிரே,

"சாலநன்கு கூறினீ ரையா, தருமநெறி
பண்டோ ரிராவணனும் சீதை தன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்துப் பின்கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி யுரைத்திடுங்கால்
தக்கது நீர்செய்தீர் தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும் என்றுகூறி யுகந்தனராம் சாத்திரிமார்!
பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்.
மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ
மண்டபநீர் கட்டியதுமா நிலத்தைக் கொள்ளவன்றோ?''

என்று திரௌபதி கேட்டதாகப் பாரதியார் காட்டும்வகையில் மகளிர்க்கு உரிமையின்கண் உள்ள வேட்கையை நன்கு புலப் படுத்தியிருக்கிறார்.

ஏயர்கோன் கலிக்காம நாயனர் "பெண் ஒருத்திபால் கடவுளைத் தூதனக ஒருவன் அனுப்புவதாம்; அதற்கிணங்கிக் கடவுளும் செல்லுவதாம்'' என்று வெகுண்டுரைத்துக் கொண் டிருந்தார். இவ்வாறு சுந்தரரிடத்தில் வெறுப்புடையவராய் இருந்த அவருக்குச் சூலைநோய் வந்துற்றது இறைவன் அருளி னல். இறைவனுடைய செயல்களை யாரே ஆராய வல்லவர்! சூலைநோயினின்று கலிக்காமர் நீங்குதற்குரிய வழி சுந்தரர் அறிவார் என்றும், அவரால் அந்நோய் தீர்க்கப்படல் வேண்டு மென்றும் கேள்வியுற்ற கலிக்காமர் அவர் சூலைநோயைத் தீர்க்க வருவதற்கு முன்னல் உடைவாளினல் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்துபட்டார்; சூலையும் தீர்ந்தது. இந் நேரத்தில் கலிக்காமர் மனைவியாரும் இறந்துபட எண்ணி அச் செயல் செய்ய முற்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், சுந்தரர் வருகையைக் கேள்வியுற்ற அவ்வம்மையார் கணவன் எண்ணம் பாழாகாதவாறு காப்பதற்காகவே போகும் உயிரினைப் பிடித்து வைத்துக்கொண்டு, வன்றொண்டரை வரவேற்றுக் கலிக்காமருக்குத் துயர் எதுவும் இல்லையென்றார், வன்றொண் டரால் நோய் தீர்க்கப்படலாகாது என்ற கலிக்காமரது விருப் பத்தை இறக்கும் உயிரினைத் தாங்கிக்கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்தார் அவர் மனைவியார். வந்த

சுந்தரரோ கலிக்காமர் கிடக்கும் இடம் நேரே சென்று அவர் மாய்ந்ததை அறிந்து, "நானும் இவர் முன் நண்ணுவேன்" என்றார். என்று கூறி உடைவாளைப் பற்றிச் சாகுஞ் செயல் செய்யத் தலைப்பட்ட நேரத்தில் கலிக்காமர் எழுந்து "கேளிரே யாகிக் கெட்டேன்" என்று விரைந்தெழுந்து அவரைத் தடுத்தார் என்று பெரியபுராணம் கூறும். சுந்தரர் பெண்ணின்பால் மிக்க காதலுடையவராய் இருப்பினும், இறந்துபட்ட கலிக்காம நாயனருடைய உயிரைப் பாதுகாத்துக்கொடுக்க முடியாமற்போன காரணத்திற்காக உயிரைவிடத் துணிந்து சாகுஞ் செயல் ஆற்ற முயன்றமையே அவருடைய பெருமைக்குச் சான்ருகி விட்டதென அறிஞர் கருதுவர். இவ்வாறு நோக்கின் கோவலனும் பெருமையுடையவனுகிருன். கண்ணகியைப் புறக்கணித்து மாதவிபால் தங்கி மனமாற்றம் உடையவனுயினும், ஒரு குடிக்கு ஒருமகனுய் இருந்த சிறுவன் ஒருவன் பொய்க்கரி போயதாகச் சொல்லிச் சதுக்கப்பூகம் அவனைப் பிடித்துத்தின்னும் நேரத்தில் தாயின் துயர் காணமாட்டாமல் கோவலன் பூதத்தை நோக்கி, "என்னுயிர் கொண்டு அவனுயிர் தா" எனக் கேட்டானென்று சிலப்பதிகாரத்தால் அறிகிரேம். இவ்வாறு சாகத்துணிந்து முன்னின்ற வகையினல் கோவலனுடைய சிறப்பு விளங்குகிறது. ஏயர்கோன் கலிக்காமருடைய மனைவி கணவன் கருத்தினை நிறைவேற்றுதற்காகச் செல்லும் உயிரினைத் தாங்கிநின்றாற் போலக் கண்ணகியும்,

"காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டுஇத் திறங்கேட்பல் யான்"

எனக் கூறினளென்று அறிகிரேம். அரசனை நேரிற்கண்டு கணவன் குற்றஞ் செய்தானல்லன் என்பதை நிறுவிவிட்டுத் தனது சினந் தணிந்த பிற்பாடே கணவனைக் கைகூடுவேன் என்று முழங்கிய கண்ணகியின் திறம் இவ்விடத்தில் ஒப்பு நோக்கிப் பாராட்டத்தக்கது.

மகளிர் கணவனை இழந்தபொழுது கலங்கி உரைத்ததாக வருமிடங்கள் பல இலக்கியங்களில் ஒப்புநோக்கத்தக்கனவாய் உள. சீவகசிந்தாமணியில் வரும் விசயையின் கூற்றென்று இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது.

"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக,
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கில் நிழல்போல் நுடங்கிப் பேயாட

எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா ருகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே"

என வருஞ் செய்யுள் விசயை கணவனையிழந்தவள் சீவகன் பிறந்தவுடன் புலம்பியதை எடுத்துக்காட்டும் ஒரு செய்யுள். "சுடுகாட்டில் உன்னை நான் ஈனும்படி நேர்ந்ததே; இங்கே உள்ள நரிகளின் கூக்குரல் உனக்கு முழவாக இருக்கிறது! இறந்துபட்டவர்களைச் சுடும் ஈமம் உனக்கு விளக்காக இருக்கிறது! சுடுகாட்டு மேட்டில் நிழல்போல அசைந்தசைந்து பேய்கள் ஆடுவது அரண்மனையில் இயற்றப்படும் நாட்டியம் போல் இருக்கிறது! எத்தனையோ செவிலியரும் தாதியரும் போட்டி போட்டுக்கொண்டு உன்னைப் பாராட்டுதற்கு அரண்மனையில் துடிதுடிப்பார்கள். அதற்கு மாருக, இங்கே கோட்டான் குழறி உன்னைப் பாராட்டுகிறது! இவ்வாருகிப் பிறப்பதோ! இதுவோ மன்னர்க்கு இயல்! இளவரசே!" என்று விசயை கூறியதாக வரும் பாட்டில் நிறைய உருக்கமுண்டு. கண்ணகி கூறிய "பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ" என்ற சொற்கள் இங்கே நினைக்கத்தக்கவை. பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் புகார் நகரத்திலிருந்து மதுரைக்குப் போகும் வழியில் மதுரை வணிகன் மாள அதற்காகப் புலம்பிக் கன்னி அழுததாக வரும் செய்யுட்களில் ஒன்று இவ்வாறு உள்ளது:—

"பொன்னுட்டின் மடவாரைப் புணர்வதற்கோ
நம்மளகா புரத்து வேந்தன்
நன்னுட்டின் மடவாரை மணப்பதற்கோ
உனைக்கடித்த நாகர் வேந்தன்
தன்னுட்டின் மடவாரைத் தழுவுதற்கோ
என்னுவித் தலைவா என்னை
இந்நாட்டில் இருத்தியெனை வஞ்சித்துப்
போயினவா றென்னே யென்னே."

"நீ இறந்துபட்டது தேவமகளிரைக் கூடுதற்காகவா, குபேர பட்டணத்து மகளிரை மணப்பதற்காகவா? நாக கன்னியரைத் தழுவுதற்காகவா? என்னை இந்நாட்டிலிருக்கும்படி செய்து விட்டு என்னை வஞ்சித்து நீ போனவிதம் என்னே! என்னே!" என்று அக்கன்னி உரைத்ததாக வருஞ் செய்யுளில் இருக்கும் நயத்தைவிட எவ்வளவு இனிய நயம்

"வாளரா வேணி யானே வாரிநஞ் சுண்ட கோவே
காளமார் கடல்போய் மீண்ட கலங்கவிழ்த் தவர்போல் நின்றேன்
வேளுரு விரதி வேண்ட மீண்டளித் திலையோ இன்றென்
ஆளரி யுயிர்தா ராயேல் அவன்வழி யடைவேன் யானே"

என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் வரும் செய்யுளில் உள்ளது? பாம்பினால் இறந்துபட்ட கணவனின் உயிரைத் திரும்பத் தருக எனக்கேட்கும் இப்பெண்மகளின் முறையீடு மிகவும் பொருத்தமாக இருக்கிறது. பாம்புகளைத் தலையில் அணிந்துள்ள கடவுளாகிய சிவபெருமானை நோக்கி, "வாளரா வேணியோனே, இவ்வராவின் நஞ்சினைத் தீர்ப்பாயாக" என்றும், கடலில் வந்த நஞ்சினை அமிர்தமாக்கி உண்ட கோவே என்று அழைத்தமையால் இந்நஞ்சினையும் தீர்த்து உயிர் வாழவைப்பாய் என்றும் இப்பெண் கேட்டது போலப் பெரும்பற்றப்புலியூர் நம்பி அமைத்திருக்கும் அழகு நினைத்துநினைத்து இன்புறத்தக்கது. கண்ணகி தன் கேள்வனை "எங்கணாஅ எனக்கூறி நினைந்தேங்கி மாழ்குவாள்" என இளங்கோவடிகள் அமைத்துக் கூறியவிடத்தில் கணவன் எங்கு உற்றானோ என்று வருந்திவருந்தி ஏங்கி மாழ்குவாள் ஆயினாள் கண்ணகி என்பதை ஒவ்வொரு சொல்லும் துயரொடு காட்டி நிற்கிறது. நினைந்து ஏங்கி மாழ்குவாள் என்பதன்கண் உள்ள செறிவும் திட்பமும் உன்னத்தக்கவை.

கம்பராமாயணத்தில் வானுலகத்திலிருந்து மீண்ட தசரதனிடம் இராமன் வேண்டியதாகச் சொல்லும் ஒரு வரத்தினைக் கண்ணகி வானுலகத்திலிருந்து மீண்ட பிற்பாடு கூறிய கூற்று ஒன்றினோடு ஒப்புநோக்குதல் பொருந்தும். தசரதன் விருப்பம்போல் கேட்க என்று இராமனிடம் பணிக்க, இராமன் "இன்று திரும்பவும் காணப்பெற்றதே பெரும்பேறு, வரம் வேறு வேண்டத்தக்கது உண்டோ" என, மீண்டும் தசரதன் வற்புறுத்த,

"தீய ளென்றுநீ துறந்த என் றெய்வமும் மகனும்
தாயுந் தம்பியு மாம்வரந் தருகெனத் தாழ்ந்தான்"

இராமன். தசரதனை நோக்கி, "தீயவளென்று நும்மால் கைவிடப்பட்ட என் தெய்வமாகிய கைகேயி எனக்கு மீட்டும் தாயாகும் வரந்தருதல்வேண்டும்" என்றும், "அத்தெய்வத்தின் மகன் பரதன் நும்மால் மகனல்லன் எனத் துறக்கப்பட்டவன் மீண்டும் எனக்குத் தம்பியாக வரும் வரந்தருதல்

வேண்டும்" என்றும் இராமன் வணங்கி வேண்டினன் என்று இராமாயணம் கூறுகிறது. இராமனுடைய தாயாகக் கைகேயி ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் தசரதனுடைய மனைவியுமாகி விடுகிருள்; இராமன் தன் தம்பியாகப் பரதன் ஒப்புக்கொள் ளப்பட்டவுடன் தசரதனுடைய மகனுகவும் மாறிவிடுகிருன். விண்ணுலகு புக்க தசரதனுடைய சினத்தைத் தணித்து, தசர தனுடைய தெய்வயாக்கையிலிருந்து அருள்சுரக்கும்படி இராமன் வேண்டினன் என்பது இராமாயணத்தாற் பெறப் படுகிறது. சிலப்பதிகாரத்திற் கண்ணகி தன் கணவனைக் கொல்வித்த பாண்டியனை "அறிவறை போயவன்" என்றும், "தேரா மன்னன்" என்றும் வெகுண்டுரைத்தவள் விண்ணு லகு சென்று திரும்பிச் செங்குட்டுவன் எடுத்த கோயிற் படிமத்தில் வந்துற்றுப் பேசிய நாளில்,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந் தாயினன் நானவன் றன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்"

என்று கூறினளென அறிகிறோம். குற்றமுடையவன் என்று இகழ்ந்த தன் வாயினலே அவன் "தீதிலன்" என்று கூறி னள். இதனை அரும்பதவுரையாசிரியர், "கண்ணகி மானிட யாக்கையிற் கொண்ட சிவப்பாறிப் பேசும் இடம்" எனக் குறிப்பிட்டார்.

இராமாயணத்தில் இராமனை நோக்கி இறந்துபடும் வாலி கூறியதாக வரும் கூற்று இது:—

"வாலியைப் படுத்தாயலை மன்னற
வேலியைப் படுத்தாய் விறல்வீரனே."

"அற வேலியை அழித்தாய் விறல்வீரனே" என இகழ்ந்து பேசிய வாலியின் கூற்றிற்கு ஒப்பாகக் கண்ணகி அரசன் முன்னின்று "சூழ்கழல் மன்ன" என முழங்கிய முழக்கம் நினைக்கத்தக்கது. "குற்றஞ் செய்திலாத என் கணவனைக் கொன்ற உன் காலில் வீரக்கழல் வேறு சூழ்ந்து கிடக்க வேண்டும்போலும்!" என்ற குறிப்பை வைத்து அவள் பேசினள் என்பது

"வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்திங்கு

என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி.''

என்ற வகையால் இளங்கோவடிகளால் எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

நகரங்களிலும் கோட்டைகளிலும் வீசிக்கொண்டிருக்கும் கொடிகள் கவிஞர் சிலருக்கு வா என அழைப்பது போலவும், சிலருக்குப் போ எனப்பகர்வது போலவும் தோன்றுவதுண்டு. மிதிலையில் வீசிக்கொண்டிருந்த கொடிகள் "இங்குதான் திருமகள் உள்ளாள் வருக ஐயனே'' என இராமனை அழைத்ததுபோல் இருந்தன என்றார் கம்பர். வில்லிபாரதத்தில்,

"ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலிவண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாகமாட்டான்
மீண்டுபோ கென்றன்றந்த வியன்மதிற் குடுமிதோறும்
காண்டகு பதாகையாடை கைகளாற் றடுப்ப போன்ற''

என வரும் இடத்தில் துரியோதனனை நோக்கிக் கொடிகள் "வாரற்க, பாண்டவர்க்குப் படைத்துணை போக முன்னரே கண்ணன் முடிவு செய்துவிட்டான்'' என்று கூறுவனபோல் இருந்தன என்றார். கவிஞர் பாரதிதாசன், கதிர்நாட்டை நோக்கி அதன் பகையான வேழநாட்டுப் படை செல்லும் பொழுது

"கதிர்நாட்டின் நெடுங்கோட்டை மதிலின் மீது
கைகாட்டி வாபகையே என அழைக்கும்
புதுமைபோல் கொடிபறக்கக் கண்டார் அங்கே.''

என்று கூறினர். பகைக்கு அஞ்சாமல் வருக பகையே எனக் கதிர்நாடு வரவேற்றதென்று அழகுபட வருணித்துள்ளார். இவற்றைச் சிலப்பதிகாரத்தில் வரும் ஒரு வருணனையோடு நாம் ஒப்புநோக்குதல் கூடும். புறஞ்சேரியிறுத்த காதையில்,

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட''

என்றவிடத்திற் கோவலனை இங்கு வராதே திரும்பிப் போ என்று காற்றசைக்க அசையும் நெடுங்கொடிகள் கூறியது போல் வைத்துக் கூறினர் கவிஞர்.

கம்பராமாயணத்தில்,

“ மீனாய் வேலையை யுற்றார் சிலர்சிலர் பசுவாய் வழிதொறும்
[மேய்வுற்றார்
ஊனார் பறவையின் வடிவுற் றார்சிலர் சிலர்நான் மறையவ ருருவானார்
மானார் கண்ணிள மடவா ராயினர் முன்னே தங்குழல் வகிர்வுற்றார்
ஆனார் சிலர் சில ரையா நின்சர ணென்றார் நின்றவ ரரியென்றார்.”

என்று வரும் பகுதி இராவணன் மகன் அட்சயகுமரன் அனுமனாற் கொல்லப்பட்டவுடன் தோற்று ஓடியவர்களுடைய செயல்களைப் புனைந்துரைக்கும் பகுதி.

“ வரைக்கலிங்கர் தமைச்சேர மாசை யேற்றி
வன்தூறு பறித்தமயிர்க் குறையும் வாங்கி
அரைக்கலிங்கம் உரிப்புண்ட கலிங்கர் எல்லாம்
அமணரெனப் பிழைத்தாரும் அனேகர் ஆங்கே.

வேடத்தால் குறையாது முந்நூ லாக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியாற் கங்கை
ஆடப்போந் தகப்பட்டோம் கரந்தோம் என்றே
அரிதனை விட்டு உயிர்பிழைத்தார் அனேகர் ஆங்கே.

குறியாகக் குருதிக் கொடி ஆடை யாகக்
கொண்டுடுத்துப் போர்த்துத்தம் குஞ்சி முண்டித்து
அறியீரோ சாக்கியரை யுடைகண் டிலேன்
அப்புறமென் றியம்பிடுவர் அனேக ராங்கே.

சேனைமடி களங்கண்டேம் திகைத்து நின்றேம்
தெலுங்கரேம் என்றுசில கலிங்கர் தங்கள்
ஆனைமணி யினைத்தாளம் பிடித்துக் கும்பிட்டு
அடிப்பாணர் எனப்பிழைத்தார் அனேகர் ஆங்கே.

என்று கூறும் கலிங்கத்துப்பரணியில் வரும் தாழிசைகள் கருணாகரனுக்குத் தோற்றோடிய கலிங்கர்கள் செய்தியைக் கூறுவன. இவற்றை,

“ சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடு பாணியர் பல்லியத் தோளினர்
ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்து வாளொழியத் தாந்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயிற் படர்தர ”.

என்னுஞ் சிலப்பதிகாரப் பகுதியோடு ஒப்புநோக்கலாம். செங் குட்டுவனுக்குத் தோற்று வடநாட்டு மன்னர்கள் காஷாய உடையினராய் வளர்க்குஞ் சடையினராய் திருநீற்றுப் பூச்சின ராய்த் துறவியராய்ச் சென்று ஓடினார்கள் என்று சிலப்பதி காரம் கூறுவதால் செங்குட்டுவனுக்குப் பொதுவாகச் சமயத் துறவிகளிடத்துள்ள மதிப்பு வெளியாகிறது. அதனையுணர்ந்து சமயவேடங்கள் தாங்கித்தோல்வியுற்றோர்கள் ஓடினார்களென் பது குறிப்பு. பாட்டுப் பாடுபவர்களாக, பல இன்னிசைக் கருவி களை இயக்குபவர்களாக, ஆடுங் கூத்தர்களாகப் பலர் தப்பி ஓடினார்களென்று கூறப்படும் இடத்தில் செங்குட்டுவனுக்கு நுண்கலையின்கண் உள்ள ஆர்வம் ஒருபால் எடுத்துக்காட்டப் படுகிறது. அதுகாரணமாக அவர்களை அவன் விட்டுவிட்டான் என்பது குறிப்பு. அனுமன் பெற்ற வெற்றிகண்ட அரக்கர் சிலர் மீனாகிக் கடலுட் புக்கனர் என்றும், பசுவாகி வயல்களிற் சிலர் மேயலுற்றார் என்றும், பறவை வடிவுற்றுச் சிலர் பறக்க லுற்றார் என்றும், மறையவர் உருவிற் சிலர் மறைந்தனரென் றும், முடிமயிரை வகிர்ந்துகொண்டு மடவார்வேடம் பூண்டு சிலர் ஓடினரென்றும் கம்பராமாயணம் கூறுகிறது. சிலப்பதி காரத்துக் காட்சிக் காதையில் வரும் ஒரு பகுதி இந்நிலையில் நோக்கத்தக்கது :—

"வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீர் ஆயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் — கேளீ ராயின்
தோட்டுணை மறக்குந் துறவொடு வாழுமின்".

செங்குட்டுவன் முன்னர்க் கடலிலே வெற்றி கொண்டா னாதலின் கடலை நோக்கி இப்பொழுது போர்செய்யப் புறப்பட மாட்டான். எனவே கடலினுள் மீனாகிக் குதிக்க என்றும், மலையில் முன்னரே விற்பொறித்து விட்டான் ஆதலின் வென்ற அவ்விடத்திற்கு வேறற் பொருட்டுச் செல்லமாட்டான்; எனவே பறவையாகி மலையின்கண் பறந்து செல்க என்றும் குறிப்பிட்டுக் கூறுவதுபோல் இச்சொற்கள் உள. கடற் பக்க மும் விடர்ப்பக்கமும் சென்றால் உய்யலாம், பிற இடங்களில் நீங்கள் தங்குவீராயின், உங்கள் உங்கள் காதலியரைத் துறத் தல் நேரிடும் என்ற குறிப்புப்பட இக்கூற்று அமைக்கப்பட்

டிருக்கிறது. கலிங்கத்துப்பரணியில் சமணத்துறவிகள் வேடம்பூண்டும் அந்தணர் வேடம்பூண்டும் நீராடச் செல்வார் வேடம்பூண்டும் சாக்கியத் துறவிகள் வேடம்பூண்டும் பாடுநர் வேடம்பூண்டும் கலிங்கர்கள் சிலர் தப்பி ஓடினர்களென்பது சிலப்பதிகாரத்தை அடியொற்றி எழுதியிருத்தல் கூடுமென விளம்புவது புனைந்துரையாகாது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

"ஆனைகட்டி யரசாண்டாலும் பல
ஆயிரம் வித்தைகள் கற்றாலும்
சேனைகட்டிப் பகை வென்றாலும் அவர்
தின்னக் கொடுப்பவள் காவேரி
அன்னம் கொடுப்பவள் காவேரி, நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி
இன்னும் மனிதர்க்கு வேண்டிய இன்பங்கள்
யாவையும் காவேரியே தருவாள்"

என்று காவேரியைப்பற்றிக் கும்மிப்பாட்டாகப் பாடினர். இப்பாட்டினுள் "தின்னக் கொடுப்பவள் காவேரி, அன்னம் கொடுப்பவள் காவேரி" என்றார். இது சிலப்பதிகாரத்தில் வரும்,

"வாழி யவன்றன் வளநாடு
மகவாய், வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி யொழியாய்
வாழி காவேரி"

என்னும் கானல்வரிப் பாட்டோடு ஒப்புநோக்கத் தக்கது. காவேரி வளர்க்குந் தாயாகிப் பேருதவி புரிகின்றாள் என்று சிலப்பதிகாரத்தில் வந்திருப்பது பிறகு பெரிதுபடுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படை.

நாவலர் சோமசுந்தர பாரதியார் இயற்றிய மாரி வாயிலில் தமிழ்வணக்கமாக அமைந்திருக்கும் மூன்று தாழிசைகள் அடியில் வருவன:—

"தமிழினைப் போற்றுதும், தாய்த்தமிழ் போற்றுதும்,
தாயைச்சேய் பேணல் தலையறம், நம் மெல்லவர்க்குந்
தாய்தமிழே யாமாத லால்;

தென்மொழி போற்றுதும், தீந்தமிழ் போற்றுதும்,
தாயிற் சிறந்தம்மம் தானும்வாழ் நாளெல்லாம்
ஆய்சுவை யோடளித்த லால் ;

தொன்மொழிபோற்றுதும், சொற்றமிழ் போற்றுதும்,
போனகமாய்த் தாரகமாய்ப் போக்கியமாய் நாமார
வானமுதின் மேலினித்த லால்.

*இவை சிலப்பதிகாரத்தில் வரும் மங்கல வாழ்த்துப் பாடலிற் காணும் வாழ்த்துக்களை அடியொற்றியவை என்பதை நான் அறிவேன். என் பேராசிரியரான நாவலர் சோம சுந்தர பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமர்ந்து மாரிவாயிலை இயற்றிக் கொண்டிருக்கும்பொழுது சிலப்பதிகாரத்தைத் தழுவியே தாம் தமிழ் வணக்கப் பாடல்களை அமைப்பதாகத் தெரிவித்தார் என்பதை இக்கூட்டத் தின்கண் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, சிலப்பதி காரத்தில் வாழ்த்தாக வந்திருக்கும் தாழிசைகள் இப்பொழுது நினைவுகூரத் தக்கவை .—*

" திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கவன் அளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற்கவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்.''

*பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தில் மாமனாக வந்து வழக்குரைத்த படலச் செய்யுள் ஒன்று* [17] *இவ்வாறு அமைந்துள்ளது :—*

---

17 செய்யுள் 21

"அரசனிங் கில்லை கொல்லோ ஆன்றவ ரில்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதில் நூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானு மில்லைகொ லுறுதி யான
தருமமெங் கொளித்த தேகொ லென்றறத் தவிசிற் சார்வார்"

தனபதி வடிவில் வந்த மதுரையங்கடவுள் தனபதியின் தங்கைக்காகவும் மருகனுக்காகவும் பரிந்துரைத்ததாக வருஞ் செய்யுள் இது. முறைகெட்டபொழுது "அரசன் இங்கில்லையோ, ஆன்றோர் இங்கில்லையோ, கடவுள்தான் இல்லையோ" எனக் கேட்கும் மனிதவியல்பு இங்குக் காட்டப்பட்டுள்ளது. திரௌபதியின் வாக்கில் வைத்துப் பாரதியார் இவ்வாறு பேசினர்:—

"பெண்டிர்தமை யுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ? பெரிய வசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்"

"இவ்வூரிற் பெண்டிர் உண்டோ, சான்றோர் உண்டோ, தெய்வம் உண்டோ" எனக் கலங்கிய கண்ணகி கேட்டாள்.

"பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?

தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?"

என்று வரும் சிலப்பதிகார அடிகள்[18] கண்ணகியின் கலங்கிய மனநிலையை எடுத்து விளக்குவன. துயருற்ற கண்ணகி இவ்வூரிற் பெண்டிரும் சான்றோரும் தெய்வமும் உளவாயின் மன்னவன் தவறிழைத்திருக்கமாட்டான் என நினைந்து பேசினாள் என்பது இதனால் அறியப்படும். இவ்வாறே, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை இயற்றிய மருமக்கள் வழி மான்மியத்தில் வரும் காரணவனின் ஐந்தாம் மனைவி கணவன் இறந்தவுடன் மருமக்கள் தாயவழியைக் கண்டித்துப் பேசி வருபவள் பேசுகிறாள்:—

18 ஊர்சூழ் வரி 51—59

" கற்றவர் உளரோ கற்றவர் உளரோ
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவர் உளரோ கற்றவர் உளரோ !

அறிஞரும் உளரோ அறிஞரும் உளரோ
வறுமைக்கு இரையாய் மக்களைவிட்டிடும்
அறிஞரும் உளரோ அறிஞரும் உளரோ !

நீதியும் உளதோ நீதியும் உளதோ
மாதர் கண்ணீர் மாரு நிலத்தில்
நீதியும் உளதோ நீதியும் உளதோ !

தெய்வமும் உளதோ தெய்வமும் உளதோ
பொய்வழிப் பொருளைப் போக்கும் இந்நிலத்தில்
தய்வமும் உளதோ தெய்வமும் உளதோ !

கற்ருர் உளரோ, அறிஞர் உளரோ, நீதி உளதோ, தெய்வமும் உளதோ என்று இப்பெண் பேசும் இடத்தில் அவளது கும்பியெரிச்சல் தானுகப் புலப்படுகிறது. இவ்வாறு பாடுதற்குச் சிலப்பதிகார அறிவு கவிஞர் தேசிக விநாயகத்திற்குப் பெரிதும் பயன்பட்டது என்று கூறுதல் தகும். கவிமணிக்குச் சிலப்பதிகாரத்தினிடத்திற் பெரியதோர் ஈடுபாடு உண்டு. அவர் மதித்த பேரிலக்கியங்களில் சிலப்பதிகாரத்திற்குத் தலையாய இடமுண்டு. அதனுல்தான்,

" தேனிலே ஊறிய செந்தமிழின்—சுவை
தேருஞ் சிலப்பதி காரமதை—
ஊனிலே எம்முயிர் உள்ளளவும்—நிதம்
ஓதியுணர்ந்து இன்புறு வோமே"

எனப் பாடினர்,

இச் சிலப்பதிகாரத்தின் பெருமை கண்ணகியின் பெருமை; கண்ணகியின் பெருமை சிலப்பதிகாரத்தின் பெருமை. உலகத்தில் எல்லோரும் கண்ணகியராக வாழ்ந்து விட்டால் கண்ணகி பெரியவள் ஆதலும் காப்பியத் தலைவி ஆதலும் எவ்வாறு? பிரிந்துறைந்த கோவலன் எழுக என உடன் எழுந்துசென்று, தன் கணவனுக்காக நடுங்கு துயருற்று நாப்புலர வாடிப் பொறுத்திருக்குங் காலம் வரையிற் பொறுத்திருந்து வேளை வந்தபொழுது நயமாக வெகுண்டுரைத்துத் திருத்தித் தன்பால் மீண்டும் உழுவலன்பினனாக ஆக்கிக்கொண்டு நெடுங்காலம் இனிது வாழலாம் என நினைத்

திருந்த வேளையில் அவனைப் பறிகொடுத்துத் தவித்த நிலையில் கள்வன் என்ற சொல் அவனுக்குச் சாலாது என்பதை உணர்ந்து அரசன் முன்னிலையிற் சென்று தன் வழக்கு எடுத்துரைத்து, "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று" என்று வீறு பேசிய அத்திருமகனை "யானோ அரசன், யானே கள்வன்" என்று கூறுமாறு செய்து, மேம்பாடு விளங்குமாறு வாழ்ந்த கண்ணகிபோல் மகளிர் அனைவரும் இருப்பர் எனின், கண்ணகி ஒரு காப்பியத்தின் தலைவியாவது எப்படி?

இம் மூன்று நாட்களிலும் கதைகளில் வரும் கதையுறுப்பினர்களிடமிருந்து எவ்வாறு காப்பிய உறுப்பினர்கள் வேறுபட்டவர்கள் என்பதைக் குறித்தும், இளங்கோவடிகளின் செய்யுட் போக்கு எவ்வாறு எவ்வாறு உள்ளது என்பதைக் குறித்தும், சிலப்பதிகாரக் காலத்திற்கு முன் தோன்றிய நூற்பகுதிகளிற் சில இளங்கோவடிகளுக்கு அடிவரைச் சட்டம் போல் உள்ளனவோ எனக் கருதுமாறு உள்ள இடங்கள் எவையெவை என்பதைக் குறித்தும், சிலப்பதிகாரக் காலத்திற்குப் பின் தோன்றிய தமிழிலக்கியப்பகுதிகள் சில எவ்வாறு சிலப்பதிகாரத்தை அடியொற்றி எழுதப்பட்டனவோ எனக் கருதுமாறு உள என்பதைக் குறித்தும் ஒருவாறு விளக்கிப் பேசினேன். மூன்று நாட்களிலும் வந்திருந்து கேட்டு மகிழ்ந்து மகிழ்வித்த அனைவீர்க்கும் என்னுடைய மனமுவந்த நன்றியுரியது.

---